பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2 | ஞாயிறு 14-5-39 பிரமாதி௵ சித்திரை௴ 31௳ | முத்து 7

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
இன்னும் ஏன் தாமதம்?	... ...	194
குறிப்பு	... ...	196
தென்றல் காற்று	... ...	198
வார நடப்பு	... ...	200
செய்தி வேட்டையில் என் வெற்றி	... ஸ்ரீ. துர்க்காதாஸ்	201
அற்றைத் திங்கள்	... ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.	204
எட்டாத மலர்	... ... ஸ்ரீ. வி. எஸ். சுப்பையா	206
ஹிமவத் கோபாலஸ்வாமி மலை	... ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்	211
கடிதம்	... ...	213
பாங்கி முன்னேற்றம்	... ...	214
சிறுவர் பகுதி	... ஸ்ரீ. எஸ். எல். நாராயணன் பி. ஏ.	215
பாதிக் கல்யாணம்	... ... "வஸந்தன்"	217

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கீற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

இன்னும் என் தாமதம்?

ஐரோப்பாவில் ராஜதந்திரிகள் என்று ஓர் அபூர்வப் பிறவிகள் இருக்கிறார்கள். அவர்கள் பேச்சும் நடத்தையும் சில சமயம் நமக்கு வேடிக்கையாக இருக்கின்றன. உலகம் யுத்தபயத்தால் கொந்தளித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் இவர்கள் 'பூலோகமோ கைலாசமோ' என்று இருப்பதைப் பார்த்து வருகிறோம். 'ஐயா! இங்கே பார்த்தீர்களா? ஹிட்லரும் முஸோலினியும் உங்களைச் சந்தியிலிழுக்கிறார்களே? என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று இவர்களை யாராகிலும் கேட்டால் 'சே! சே! அவர்கள் என்ன அப்படிச் செய்துவிட்டார்கள்? அவர்கள் பேச்சில் இரண்டாவது பாராவில் சமரஸம் தொனிக்கிறதைப் பார்க்காமல் பேசுகிறீர்களே?' என்று திருப்பிக் கேட்கிறார்கள். உண்மையில் உள்ளூற பயந்தான். ஆனால் வெளியில் சமாதான தூதர்களாக வேஷம் போட்டு வந்த டலாடியர்கள் ஒவ்வொரு சமயம் பேசும் போதும் நமது சிரிப்பு பன்மடங்கு அதிகமாகிறது. இந்த பிரிட்டிஷார் இந்தியாவில்தான் தங்கள் சாமர்த்தியத்தைக் காண்பிக்க முடியும், ஹிட்லரிடம் ஒன்றும் பலிக்காது என்று உதாசீனமாக எண்ணத் தொடங்கினோம்.

ஆனால், சேம்பர்லேன் 'சட்'டென்று ருமேனியாவுக்கும் போலந்துக்கும் வாக்குறுதி கொடுத்ததும், 'ஓஹோ! ஆள் நிஜமாகவே விழித்துக்கொண்டு விட்டார்' என்று எண்ணினோம். மேலும், பிரிட்டன் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றதைப் பார்த்தபோது ஜனநாயகங்களுக்கு இனிமேல் நல்லகாலம்தான் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால், இந்த சமயத்தில் ரூஸ்வெல்டை சமாதனப் பிசாசு பிடித்துக்கொண்டது. அவர் ஹிட்லருக்கு விடுத்த கடிதத்திற்குப் பதிலாக ஹிட்லர் காலனிக் கோரிக்கையை ஊர்ஜிதம் செய்தார். காலனிகளைத் திருப்பிக் கொடுத்தாலொழிய சமாதானம் கிடையாது என்பது முதலில் வெளியாயிற்று.

இரண்டாவதாக, ஹிட்லர் ரூஸ்வெல்ட் கோரிக்கையில் குறிப்பிட்ட சில நாடுகளை தன்கட்சிக்கு இழுத்துக்கொள்ள முனைந்தார்; அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். யூகோஸ்லாவியா முதலிய நாடுகள் "ஜெர்மனியால் எங்களுக்கு ஆபத்தில்லை" என்று ஸர்ட்டிபிகேட் கொடுத்து விட்டன. மேலும் யுத்தம் வரும்போது இவை நடுநிலைமை வகிக்கப் போகின்றன. இதனால் ஜனநாயகங்களுக்கும் ரஷ்யாவுக்கும் யுத்த காலத்தில் போக்கு வரத்து சௌகரியங்களுக்குக் கஷ்டமுண்டாகும் என்று கூறுகிறார்கள்.

மூன்றாவதாக, ஹிட்லர் ஆங்கிலோ ஜெர்மன் கப்பல் படை ஒப்பந்தத்தையும் போலந்துடன் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தையும் ரத்து செய்தார்.

ரூஸ்வெல்ட் கடிதத்திற்கு இவ்வளவு நன்றாகப் பதிலளித்த ஹிட்லர் மேற்கொண்டு நான்காவதாக ஒரு காரியமும் செய்திருக்கிறார். அதாவது, ஜெர்மனிக்கும் இதாலிக்கும் ஒரு ராஜீய ராணுவ ஒப்பந்தமும் நடந்து முடிந்துவிட்டது. இதனால் இரண்டு தேசங்களும் ஒருமித்து எக்காரியத்தையும் செய்யத் தயாராக இருக்கின்றன. இந்த ஒப்பந்தம் ஜனநாயகங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்காது; ஏற்கனவேயே இரண்டு சர்வாதிகாரிகளும் பிராண சிநேகிதர்களாயிருந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது விரோதிகளைப் பயமுறுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதென்பதில் சந்தேகமில்லை.

இதாலோ-ஜெர்மன் ஒப்பந்தத்தை தற்காப்புக்காக செய்த ஒப்பந்தமென்று ஒருவரும் எண்ண முடியாதல்லவா?

இந்த முக்கியமான ஒப்பந்தத்தால் இரண்டு பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. சேம்பர்லேன் சமாதானமாகவே ஹிட்லரை வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று இனி மேலும் நினைக்க முடியாது. மேலும் இதாலியை மெதுவாக ஜெர்மனியிடமிருந்து பிரித்துவிடலாம் என்பதும் கொக்கு தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கிற சமாசாரமாய் முடிந்தது.

ஆகவே, ஜனநாயகங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது கேள்வி. சேம்பர்லேன் பர்லினிலுள்ள ஆங்கில தூதரை திரும்பி அழைப்பது என்ற கேள்வி இப்போது இல்லை. டலாடியர் உடனே படை திரட்டவேண்டும் என்ற பிரச்னை கூடக் கிடையாது. ரஷ்யாவுடன் உடனே ஓர் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்வது தான் இப்போது செய்யவேண்டிய காரியம்.

ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று பல கன்ஸர்வேடிவ்கள்கூட காரசாரமாகக் கத்தினர்கள். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் தயங்கினர்கள். ரஷ்யாவுடன் சேராவிட்டால் யுத்தத்தை ஜெயிக்க முடியாது என்று தெரிந்திருந்தும் இந்த தயக்கம் ஏற்பட்டது. யுத்த சமயத்தில் திடீரென்று ரஷ்யா கைவிட்டுவிடுமோ, அல்லது ஐரோப்பாவிலுள்ள சின்ன ராஜ்யங்களை அது சாப்பிட்டுவிடுமோ என்ற பயம்தான் இதற்குக் காரணம். ஆகையால் ரஷ்யாவின் தரைப்படையை உதவிக்கழைக்காமல் ஆகாயப் படையை மட்டும் யுத்தத்தின்போது உபயோகித்துக்கொள்ளும்படி ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்யலாம் என்றும் சில புத்திசாலிகள் யோசனை கூறினர்கள்.

இப்படியாக ஒப்பந்தப் பேச்சுகள் நடந்துவந்த சமயத்தில் லிட்வினுப் ராஜிநாமாவைப்பற்றிக் கேட்டோம். அதனல் ரஷ்யா அயல் நாட்டுக் கொள்கையில் மாறுதல் ஏற்படுமென்றும் ரஷ்யா பிரிட்டனேடு சேராதென்று சிலர் பயமுறுத்தினர்கள். ஆனல் சேம்பர்லேன் அறிக்கையிலிருந்து அப்படி ஒன்றும் ஏற்படாதென்று தெரிகிறது. பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் இன்னும் பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதையும் அறிகிறோம்.

ஆனல், பிரிட்டன் ரஷ்யாவிடம் கொண்டுள்ள சந்தேகம் இன்னும் நீங்கவில்லை. ரஷ்யா தன் எல்லைப்புறத்திலுள்ள சிறிய நாடுகளைத் தொடுவதில்லை என்று தனித் தனியாக வாக்குறுதி கொடுக்கும்படி பிரிட்டன் கேட்கிறது. ரஷ்யாவின் மனப்பான்மையை அறிந்தவர்கள் ரஷ்யா எந்த தேசத்தையும் அடிமைப்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல என்பதை அறிவார்கள். ஆனல் சிறிய ராஜ்யங்கள் நியாயமான சந்தேகம் கொண்டிருக்கலாமாகையால் ரஷ்யா அந்த கோரிக்கையை ஒப்புக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே, ஜனநாயகங்கள் இனியும் தாமதம் செய்யாமல் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு போராடத் தயார்செய்து கொள்ளவேண்டும். 'திடு திப்'பென்று ரஷ்யாவைப்பற்றி ஏதாவது சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுக்கொண்டு காரியத்தைக் குட்டிச்சுவர் செய்யாமல் இருக்க ஜனநாயக சர்க்கார்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கும்படியும் அதற்காக நூறு தேங்காய் உடைப்பதாகவும் பிள்ளையாரை வேண்டிக்கொள்ளுகிறோம்.

விசேஷ அறிக்கை

நாளது 14-5-39 தேதியிலிருந்து பாரத மணியின் வருஷ சந்தா முன்னிருந்தபடியே 4 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

குறிப்பு

ஒரு வேண்டுகோள்

கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டிக்கூட்டம் முடிந்து பழைய காரியக்கமிட்டி ஏற்பட்டது. சூட்டோடு சூடாக ஸ்ரீ. சுபாஷ் போஸ் "முன்னேற்றக் கட்சி" ஒன்றை ஸ்தாபித்தார். தீவிர வாதிகளை ஒன்று சேர்ப்பதற்காக அவர் இக்கட்சி ஏற்படுத்தியதாகக் கூறுகிறார். காங்கிரஸில் இப்போதுள்ள ஸோஷலிஸ்டுகள், ராயிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் முதலிய தீவிரவாதிகளை ஒன்று சேர்ப்பது சுபாஷின் நோக்கம். இத்தகைய ஓர் கட்சி, பிளவை உண்டாக்குமென்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். "ஏற்கனவே தேசத்தில் உள்ள கட்சிகள் போதாதா? இது வேறு ஒன்று கிளம்பி ஒற்றுமையைக் குலைக்க வேண்டுமா?" என்று கேட்கிறார்கள். ஆனால் இதுவரை காங்கிரஸில் காந்தியர்களுக்கும் தீவிர வாதிகளுக்கும் ஒற்றுமை இருந்ததாகத் தெரியவில்லை. ஒற்றுமை இருந்தாலல்லவோ பிறகு குலைவதற்கு? வேறு சிலர் "சுபாஷ் கட்சி காந்திஜியின் கொள்கைகளையெல்லாம் ஒப்புக்கொள்ளும்போது எதற்காகப் புதுக்கட்சி ஸ்தாபிக்க வேண்டும்?" என்ற நியாயமான ஓர் சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள். காந்திஜியின் புரட்சி தத்துவங்களை தற்போது அவரது சகாக்கள் சரிவர அமுலுக்குக் கொண்டுவராமல் நிதானஸ்தர்களாய்ப் போய்விட்டதால் தான் இந்தத் தீவிரக்கட்சியை ஸ்தாபித்ததாக சுபாஷ் கூறுகிறார். காங்கிரஸ் பதவி வகிப்பதால் வரவர அது ஓர் மிதவாத ஸ்தாபனமாகப் போய்க்கொண்டிருக்கிறதென்றும், காந்திஜியே தன் புரட்சிக் கொள்கைகளை தற்போது விட்டுக்கொடுப்பதுபோல நிலைமை மாறுகிறது என்றும் சுபாஷ் பயப்படுகிறார். ஆனால் நம் சம்பந்தப்பட்டவரை காந்திஜியைவிட பெரிய புரட்சிக்காரர் உலகத்தில் வேறு ஒருவரும் இல்லை என்று நிச்சயமாகக் கூறுவோம். சுபாஷ் கட்சி மந்திரிகள் தங்கள்கடமைகளை மறக்காமல் செய்யவும், ஜனங்கள் மனதில் சுதந்தர ஆவேசத்தை ஊட்டவும் பெரிய முயற்சி செய்யும் என்றே நம்புவோம். காந்திஜியை இழிவுபடுத்தவும் காங்கிரஸில் ஒற்றுமையைக் குலைக்கவும் இந்த இயக்கம் ஆரம்பமாகவில்லை. அத்தகைய காரியங்களை சுபாஷ் பாபு செய்வார் என்று நாம் பயப்பட வேண்டியதில்லை.

ஆனால், காந்திஜியைப் பின்பற்றுபவர்களும் சுபாஷின் தோழர்களும் கவனிக்க வேண்டியது ஒன்று இருக்கிறது. கடந்த தேர்தல் விஷயங்களைப் பற்றி அறிக்கை வெளியிட்டு ஜனங்கள் கவனத்தைச் சிதறவிடாமல் இருக்க வேண்டும். நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கும் விரோதிகளை எதிர்க்க இனிமேல் ஆரம்பிக்கலாம். வரப்போகும் மாதங்களில் நமது எதிர்காலத்தையே நிர்ணயிக்கப்போகும் நிகழ்ச்சிகள் உண்டாகப் போகின்றன. இப்படிப்பட்ட சமயத்தில் நம்மை ஒன்றுசேர்க்க தலைவர்கள் முயல்வார்களாக. அப்படிச் செய்ய முடியாவிட்டால் வேற்றுமை உண்டாக்கும் அம்சங்களைப்பற்றி அதிகமாகப் பேசாமலிருப்பது நல்லது.

மறுபடியும் ராஜகோட்டை

ராவணன் தலைமாதிரி ராஜகோட்டை விஷயம் மீண்டும் மீண்டும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. தர்பார் வீரவாலா காந்திஜி சமர்ப்பித்த ஏழு பேர்களில் இரண்டு பேர்கள் சமஸ்தானப் பிரஜைகளல்ல என்று தள்ளிவிட்டார். அதற்குப் பதிலாக வேறு இரண்டு பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. வீரவாலா சில சீர்திருத்தங்களை பிரஸ்தாபித்தார். ஆனால் பிரஜாமண்டலத் தலைவர் ஸ்ரீ. தேபார் அவைகளில் அதிருப்தியைத் தெரிவிக்கவே அவர் மகாப் பொல்லாதவர் என்று வீரவாலாவுக்குத் தோன்றி விட்டது. தேபாரைச் சும்மா இருக்கச் சொல்லுங்கள் என்று காந்திஜிக்குத் தந்தி அடித்தார். இதற்குமேல் "ஐயா! நாங்களே எங்கள் விஷயங்களைத் தீர்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இங்கே வரக்கூடாது" என்று காந்திஜிக்கு ஒரு தந்தியும் அடித்துவிட்டார். ஆனால் காந்திஜி ராஜ்கோட் செல்வதென்று ஏற்பாடாகி விட்டது. காந்திஜி ராஜ்கோட்டுக்கு புறப்படு முன்னமேயே அடக்குமுறை ஆரம்பமாகி விட்டதென்று தெரிகிறது.

சிறைக்குப்போன சில தலைவர்கள் நிலத்தைப் பிடுங்கிக் கொண்டதாகவும், அச்சுச் சட்டம் ஆரம்பமாகி விட்டதாகவும் அறிகிறோம். வீரவல்லா சமாதானமாக நிலைமையைச் சமாளிக்கத் தயாராயில்லை என்று வெளிச்சமாகத் தெரிகிறது. போதாக்குறைக்கு, சிறுபான்மைப் பிசாசை ஆட்டிவைக்க ஸ்ரீ. ஜின்னா ராஜகோட்டுக்கு வரப்போகிறாராம்.

இந்த சமயத்தில் ராஜகோட்டை விஷயத்தில் காந்திஜி காலத்தையும் பலத்தையும்

வீணாக்கக்கூடாது என்று பலர் நினைக்கிறார்கள். காந்திஜி வைஸ்ராயோடு பேசி சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்பதும் வீரவாலாவுடன் பேசுவதில் உபயோகமில்லை என்பதும் அவர்கள் அபிப்பிராயம், ஆனால், காந்திஜி ஓர் தீர்மானமான புரட்சி திட்டம் இல்லாமல் ராஜ்கோட்டுக்குப் போகமாட்டார் என்பது நிச்சயம். சர்தார் படேல் சொன்னதைப் போல் அவர் ஓர் புதுமுறைப் போர் நடத்தப் போகிறார். இந்தப் போரால் வீரவாலா வீழ்ச்சி அடைவதல்லாமல் சமஸ்தான ஊழல்களும் அநீதிகளும் ஒழியப்போகிறதென்பதில் சந்தேகமில்லை.

தேன் ஆப்பிரிக்காவில்

இந்தியர்களை ஒதுக்கிவைக்கும் "ஆசியாக்காரர் சட்டம்" தென் ஆப்பிரிக்காவில் நிறைவேறுகிறது. இதனால் இந்தியச் சொத்துரிமைக்கும் குறிப்பாக அவர்கள் கௌரவத்திற்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்தை நாம் இன்னும் உணரவில்லை. தமிழர்கள் என்று சொல்லிக்கொண்டு 'ஹிந்தி ஒழிக' என்று கதறுகிறோம். ஆனால் தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களும் பொதுவாக இந்தியர்களும், இச் சட்டத்தால் எவ்வித நிலைமைக்கு வரப்போகிறார்கள் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கவில்லை. அதைப் பற்றி நாம் கிளர்ச்சி செய்யவில்லை. சர்க்காரின் கொடுமையைத் தாங்கமுடியாமல் டிரான்வால் இந்தியர்கள் சத்தியாக்கிரஹம் செய்யப் போவதாக ஓர் செய்தி கூறுகிறது. இந்த நெருக்கடியான நிலைமையை விளக்கி இந்தியத் தலைவர்களுக்கும் இந்திய சர்க்காருக்கும் வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கொடுமையை நாம் வழக்கம் போல் சகித்துக்கொண்டு இருப்போமா? அல்லது, தேசமெங்கும் கிளர்ச்சி நடத்தி இந்திய சர்க்காரை உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தூண்டுவோமா? நமது மந்திரிகள் 'பைல்'களை அழகு பார்த்துக்கொண்டிருப்பார்களா? அல்லது உடனே வைஸ்ராய்க்குத் தந்தி அடித்து நெருக்கடியை உண்டாக்குவார்களா! நமது தலைவர்கள் சென்றுபோன தேர்தலைப்பற்றி கதை விட்டுக்கொண்டிருப்பார்களா? அல்லது உடனே காரியக் கமிட்டியைக் கூட்டிப் போருக்குத் தேசத்தைத் தயார் செய்வார்களா?

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வாராவாரம் "பாரத மணி"யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

தென்றல் காற்று

காங்கிரஸ் பின்வரும் தீர்மானங்களை உடனே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

(1) இந்தியாவுக்குச் சுயேச்சை வேண்டியதில்லை.

(2) ஹிந்து-முஸ்லீம் வேற்றுமைக்குப் போராடவேண்டும்.

(3) சமஸ்தானங்களில் சுயேச்சை இயக்கம் கூடாது.

(4) பெடரேஷன் வேண்டும்.

* * *

உண்மையில், காங்கிரஸ் தன் லக்ஷ்யத்தை அடையவேண்டுமென்றால் மேற்சொன்ன தீர்மானங்களைச் செய்யவேண்டும். ஜனாப் ஜின்னாவை வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் மேற்கொண்ட தீர்மானங்களைச் செய்வதைத் தவிற வேறு வழி இல்லை. ஜின்னாவைத் திருப்தி செய்யும் முயற்சியில் காங்கிரஸ் தோல்வியுற்றதால் நமது யோசனையைச் சொன்னோம்!

* * *

காங்கிரஸ் எப்படித் தீர்மானம் செய்ததோ அதற்கு நேர் விரோதமாக ஜின்னா தீர்மானம் செய்வது வழக்கம். காங்கிரஸ் 'உட்காரு' என்றால் ஜின்னா 'உட்காராதே' என்று கூடச் சொல்வதில்லை. 'எழுந்திரு' என்று சொல்வது வழக்கம். காங்கிரஸ் சமஸ்தான இயக்கங்களை ஆதரிப்பதாகத் தீர்மானம் செய்தபோது ஜின்னா அதை ஆதரிக்காமல் போனதுமட்டு மல்லாமல் அந்த இயக்கங்களுக்கு நேர் விரோதமாகப் பேசுகிறார் ஷோலாப்பூரில். காங்கிரஸ் நாளைக்கு சமஸ்தான இயக்கத்திற்கு விரோதமாகத் தீர்மானம் செய்யட்டும். உடனே ஜின்னா வரிந்து கட்டிக்கொண்டு சுதந்திர யுத்தம் செய்யத் தொடங்குவார்! இதுமாதிரி வட்டிக்குப் போட்டி பண்ணுவது ஜின்னாவின் ஜாதக விசேஷம். சண்டிகை கதை கேட்டிருக்கிறீர்களல்லவா?

* * *

ஆகையால், ஜின்னாவைத் தேச பக்தராக்க வேண்டுமானால் காங்கிரஸ் அபத்தமான தீர்மானங்களைச் செய்யவேண்டும். அதன் பிறகு ஜின்னா செய்யும் கார்யங்களைத்தான் பாருங்களேன்!

* * *

கல்கத்தாக் கூட்டத்தைப் பற்றியும் காந்திஜி தனக்கு உதவி செய்யாததைப் பற்றியும் சுபாஷ் பாபு ஓர் அறிக்கை வெளியிட்டார். உடனே காங்கிரஸ் தலைவர் ராஜன் பாபு, சுபாஷ் பாபுவின் பிடிவாதத்தைக் குறித்து ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். இனிமேல் எம். என். ராய் ஓர் அறிக்கை வெளியிடப் பேனாவைத் தீட்டுவதாகவும் அதற்குப் பதில் சொல்ல ஓர் குறிப்பிட்ட தலைவர் உபமானம் தேடிக் கொண்டிருப்பதாகவும் தென்றல் காற்றில் ஒரு செய்தி வருகிறது.

* * *

"அபிப்பிராய பேதங்கள் உண்டானால் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பேசியோ அல்லது எழுதியோ சிக்கலைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று சர்தார் பிருந்தாவனத்தில் பேசியிருக்கிறார். ஆனால் அவரும் அவரது சகாக்களும் மட்டும் அறிக்கை வெளியிடலாமா என்று சுபாஷ் கேட்டால் உடனே சர்தார் அது தவறல்ல என்று ஓர் அறிக்கை வெளியிடுவார். இப்படியாகத் தலைவர்கள் கலந்து பேசிக் கொண்டு சிக்கலைத் தீர்ப்பார்கள்.

* * *

ஆந்திர மாகாணப் பிரச்னையை மறுபடியும் கிளப்ப வேண்டுமென்று யோசனை சொல்லுகிறார் ஸ்ரீ ராமதாஸ் பந்துலு. அஸெம்பிளியில் குறுக்குக் கேள்விகள் போட்டு ஆந்திர மாகாணப் பிரச்னையை அஸெம்பிளியில் வற்புறுத்த வேண்டுமென்பது அவர் யுக்திகளில் ஒன்று. இதுவரை ஸ்ரீ. கே. வி. ஆர். ஸ்வாமி வற்புறுத்துகிற வற்புறுத்தலில் ஆந்திர மாகாணம் இன்னும் வரவில்லையென்பதைப் பார்க்கும்போது அதற்கு கொஞ்சம்கூட ரோஷமில்லையென்று விட்டுவிட வேண்டியதுதானே!

* * *

தெலுங்கில் கேள்வி கேட்டுத் திணற அடிப்பதைவிட, கத்தே ரங்கய்ய நாயுடுவை ஒரு ஆவர்த்தனம் பேசச் சொன்னால் உடனே தனி மாகாணம் கதறிக்கொண்டு வந்துவிடும் என்று தோன்றுகிறது.

* * *

பள்ளிக்கூடம் திறப்பதற்குள் கட்டாய ஹிந்தியை எடுக்காவிட்டால் மூலபலச் சண்டையை ஆரம்பிக்கப் போவதாக ஒரு ஹிந்தி எதிர்ப்பாளர் கர்ஜனை செய்கிறார். உடனே ஏராளமான செங்கல் கருங்கல்களைத் திரட்டி ஓர் பெரிய படை தயாரித்துவிட்டால் மூல பலம் பெருகி புரட்சி உண்டாகும். அப்பொழுது இந்தியாவிலே ஏற்படக்கூடிய மகத்தான மாறுதல்களைப்பற்றி ஸ்ரீ ஹிண்டஸ் "தலைகீழாகப்போன மனித ஜன்மம்" என்று மற்றொரு பெரிய புஸ்தகம் எழுதும்படியிருக்குமல்லவா?

* * *

திருநெல்வேலியில் சில காங்கிரஸ்காரர்களுக்கு அடி கிடைத்தது. கும்பகோணத்தில் ஒருவர் தாக்கப்பட்டார். சமீபத்தில், திருச்சிக்குச் சமீபத்தில் ஒரு காங்கிரஸ் தொண்டர்மீது 'மூல பலம்' விழுந்து அதனால் படுகாயமடைந்தார். அது நாலு ரூபாய்க்கு ஏலம் போடப்பட்டதாம். அதே திருச்சினாப்பள்ளியில் ஸ்ரீ சுப்பையாவின்பேரில் 'மூலபலத்தை' விட்டெறிந்த மஹோற்சவத்தையும் பார்த்தோம்.

* * *

ஹிந்தி எதிர்ப்பாளரின் மூலபலம் பெருகப் பெருக அதனால் காங்கிரஸ்காரர்கள் ஏலம்போட ஆரம்பித்து விடுவார்களென்று நாம் பயப்படுகிறோம். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல 'மூலபலம்' காங்கிரஸுக்குப் பண உதவி செய்வதைக் கண்டு ஹிந்து எதிர்ப்பாளர் இனிமேல் 'மூலபலச் சண்டையை' விட்டு விடுவார்களென்று நம்பலாம்.

* * *

வாழ்க்கையில் உபயோகமாக உள்ள படிப்பைச் சொல்லிக் கொடுக்கவேண்டி பெரியோர்கள் அடிக்கடி சொல்லுகிறார்களல்லவா? பின்வரும் அப்பியாசங்களை கலா சாலைகளில் சொல்லிக் கொடுத்தால் உண்மையில் உபயோகமாயிருக்கும்.

1) பொய் சொல்லுவதிலும் குயுக்தி வாதத்திலும் நாலுவருஷப் பயிற்சி

2) குறிபார்த்துக் கல்லெறிவதில் இரண்டு வருஷப் பயிற்சி.

3) காரசாரமாகத்திட்டுவதிலும் எழுதுவதிலும் ஓர் வருஷப் பயிற்சி.

4) அறிக்கை வெளியிடுவதில் ஆறுமாதப் பயிற்சி.

இந்தப் பயிற்சி முடிந்து வெளிவரும் இளைஞர்கள் ராஜீய உலகில் மிகுந்த பிராபல்யத்தையும் வெற்றியையும் அடைவார்கள்.

வார நடப்பு

இவ்வார சம்பவங்கள் மந்தமாகவே இருக்கின்றன. காங்கிரஸ் தலைவர் தேர்தல் முடிந்த பிறகு, காரியக்கமிட்டி அமையப்பெற்ற பிறகு, தலைவர்களில் ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் ஏதாவது இருந்தால் அதைப் போக்குவதற்கு அவரவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைப்பற்றி அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

பதவியை ராஜிநாமா செய்ததற்குக் காரணம் என்ன என்பதை சுபாஷ்பாபு விரிவாகத் தெரிவித்தார். ஆதிமுதல் அந்தம் வரையில், தலைவர் தேர்தலைப்பற்றியும், கல்கத்தாவில் தலைவர்கள் ஆலோசனைபற்றியும் நடந்த வாக்குவாதங்களை எடுத்துக் கூறி "நான் அதிகாரமற்ற ஒரு பொம்மைத் தலைவராக இருக்க எனக்கு இஷ்டமில்லை" என்று சொல்லி தான் ராஜிநாமா செய்ததாகக் காரணம் கூறுகிறார்.

அவர் ஒரு புதுக்கட்சியும் ஆரம்பித்திருக்கிறார். அதற்கு 'பார்வாட் ப்ளாக்' என்று பெயராம். அக்கட்சி காந்திஜியினுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்யாதாம். பல கக்ஷிக்காரர்களும் அதனுள் சேரும்படி அவ்வளவு பரந்த நோக்கத்தையுடையது அக்கட்சி என்றும் தெரிவிக்கிறார். தேசமுன்னேற்றத்திற்காக உழைக்க இக்கட்சி ஏற்பட்டது.

அடுத்த காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டி அமைப்புப் பிரச்னையை எடுத்துக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

ராஜ்கோட் சமரஸம் காந்திஜியின் தீவிர முயற்சியின்றி ஏற்படாததுபோல் இருக்கிறது. திவான் வீரவல்லா காந்திஜியை ராஜ்கோட்டுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறார். இன்னும் என்னென்ன கைச்சரக்குகள் அவருக்கு உண்டோ அவைகள் அவ்வளவையும் காண்பிக்கிறார்! இவைகளை எல்லாம் கண்டு காந்திஜியா ஏமாறுகிறவர்? வீரவல்லாவின் போக்கைக் கண்டித்துத்தான் மறுபடியும் மே 12ஷ ராஜ்கோட் போகப்போவதாக காந்திஜி வீரவல்லாவுக்கு தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

சென்னை சட்டசபையில் விற்பனை வரி மசோதா விவாதம் நடந்து வருகிறது.

ஹிட்லர் ஜெர்மனி பிரதிநிதிச் சபைமுன் ஆற்றிய சொற்பொழிவு எல்லோரையும் சிறிது நிதானிக்கும்படி செய்கிறது. அவ்வளவு அழகாக வாதித்துப் பேசி இருக்கிறார். அவர் பேசின பேச்சில் போலந்தைப்பற்றினவரைக்கும் அத் தேசம் ஹிட்லருக்கும் பதிலளித்திருக்கிறது.

பிரிட்டனோடு தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தையே காரணமாகக் கொண்டு போலந்து—ஜெர்மனி ஒப்பந்தத்தை ஹிட்லர் நிராகரித்ததை போலந்து கண்டித்தது. ஆங்கிலோ—போலீஷ் ஒப்பந்தம் போலந்தின் சுய பாதுகாப்புக்காகத்தான் என்பதை ஹிட்லர் அறியாததைப்பற்றி போலந்து வருத்தப்படுகிறது என்று பெக் சொன்னார். டான்ஸிக்கைப்பற்றி சமாதானமாக எந்த ஒப்பந்தத்துக்கும் வர தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இதற்கு ஹிட்லர் என்ன செய்யப் போகிறார்? அவர் திடீரென்று போலந்தின்மீது பாயலாம்.

ஆனால் தான் செய்யப் போவதைப்பற்றி சிறிது ஆலோசிக்கிறார்போலத் தோன்றுகிறது. அவர் செய்யப்போவது ஆங்கிலோ—சோவியத் பேச்சின் முடிவை யொட்டி இருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆங்கிலோ-ஸோவியத் ஒப்பந்தப் பேச்சு இன்னும் முடிவு பெறவில்லை. ஒப்பந்தத்தில் சில விஷயங்களில் இருதிறத்தாருடைய அபிப்பிராயமும் வித்தியாசப்படுவதாகத் தெரிகிறது.

ஜெர்மனி அயல்நாட்டு மந்திரியும் இத்தாலி அயல்நாட்டு மந்திரியும் சென்ற சில நாட்களாகப் பேசி நடத்திவந்த சம்பாஷணை முடிந்தது. முக்கியமாக ஜெர்மனி இத்தாலியைப் பொருத்தவரையில் இப்பொழுது நடந்துவந்த சம்பவங்களைப்பற்றியும், அவ்விருதிறத்தாரும் கையாளவேண்டிய நிகழ்கால முறையைப்பற்றியும் பேச்சு நடந்தது. இத்தாலி—ஜெர்மன் ராணுவ ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அறிக்கை கூறுகிறது.

ஜார்ஜ் சக்கரவர்த்தியும் அவரது மனைவியும் கனடா தேசத்துக்குப் பிரயாணமானார்கள்.

*செய்தி வேட்டையில் என் வெற்றி

(ஸ்ரீ துர்க்காதாஸ்)

பத்திரிகைத் தொழில் ஒரு ஸ்வாரஸ்யமான வேலை. அதில் பல திடுக்கிடும் சம்பவங்களும் ரஸமான கட்டங்களும் அடங்கி இருக்கின்றன. இந்த சம்பவங்களில் எது ஸ்வாரஸ்யமானது என்று சொல்லுவது அவரவர்கள் அபிப்பிராயத்தைப் பொருத்தது. என் அனுபவத்தில், இந்தியா சட்டசபையில் பகத்ஸிங் குண்டு போட்டது தான் மிகவும் ஸ்வாரஸ்யமான சம்பவம். 36 பத்திரிகைக்காரர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனினும், மின்னல்போல் அவ்வளவு சீக்கிரத்தில் முதலில் நான்தான் அதை உலகத்துக்குத்தெரியும்படி செய்தேன். பாக்கிப்பேர் அந்தச் செய்தியை வெளியிடுவதற்கு 8 மணி நேரம் முன்பாகவே நான் அனுப்பிய செய்தி உலகெங்கும் சுற்றிவந்தது. லண்டனில் இருப்பவர்களுக்கு அது வெகு ஆச்சரியமாகத் தோன்றிற்று. ராய்ட்டர் "அது எப்படி நடந்தது?" என்று கேட்டது. இதைப்போல் மற்றும் ஓர் சந்தர்ப்பத்தை வெற்றிகரமாக வெளியிட்டேன். அதுதான் லாகூர் காங்கிரஸில் சுதந்திரத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட சம்பவம். இவற்றை எல்லாம் யுக்தியாலும், சமயோசிதத்தாலும் தான் வெளியிட முடிந்தது.

முகத் தோற்றத்திலிருந்தும், இன்னும் சில சூட்சுமமான அடையாளங்களிலிருந்தும் செய்தியை அறிய நான் செய்த முயற்சி வெற்றிகரமாக முடிந்ததைப்பற்றி நான் பெருமைப் படுகிறேன். சரித்திரத்திலேயே முக்கியத்வம் வகிக்கக்கூடிய காந்தீ-இர்வின் ஒப்பந்தத்தை முதன் முதல் நான் தான் உலகத்துக்குத் தெரிவித்தது. கடந்த வருஷத்தில் பீஹார், மத்திய மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகளை ராஜினமா செய்யும்படி செய்த அரசியல் நெருக்கடிச் செய்தியை நான் வெளியிட்டதும் அப்படியேதான்.

முதலில் சொன்ன காந்தி-இர்வின் ஒப்பந்தச் செய்தி உலகத்தையே திடுக்கிடச் செய்தது. ஒரு டஜன் பிரிட்டிஷ், அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் இதற்காகவே டில்லிக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது நான் அஸோஸியேடட் பிரஸ்ஸில் ஆசிரியராக இருந்தேன். காலம் சென்ற ஸ்ரீ கே. ஸி. ராய் எனது தலைவர். சேனைத் தலைவர் சண்டைக்குத் தன் போர்வீரர்களை வகுத்து அனுப்புவதுபோல், எங்கள் பிரஸ் பிரதிநிதி ஒருவரை சமரஸம் செய்தவர்களான ஸர் தேஜ் பகதூர் ஸப்ருவும் ஜெயகரும் இருந்த இல்லத்துக்கு அனுப்பினர். மற்றொருவரை மகாத்மா காந்தியின் இருப்பிடமான டாக்டர் அன்ஸாரியின் வீட்டுக்கு அனுப்பினர். என்னை வைஸ்ராய் 'வீட்டின் உள் கச்சேரியில்' நிறுத்தினர். ஆக இம்மூன்று இடங்களிலிருந்தும் செய்திகள், ராய்ட்டர் பில்டிங்கிலிருக்கும் ஸ்ரீராயினிடத்தில் வந்து குவிந்தன. நாங்கள் ஒருவரோடொருவர் கலந்து கொள்ளவில்லை. ஆனல் அமெரிக்க அஸோஸியேடட் பிரஸ்ஸின் ஜேம்ஸ் மில்ஸ் எங்கள் நண்பர். நாங்கள் தெரிந்துகொண்ட சில செய்திகளை அவர் ஒருவருக்கு மாத்திரம் தெரிவித்தோம். எங்கள் முறையில் அவர் மிகுந்த நம்பிக்கையுள்ளவரானர். அவர் சார்பாக நியூயார்க்குக்கு செய்தியை நாங்களே கூட அனுப்பலாம்!

வைஸ்ராய் வீட்டுக்கு மகாத்மா முதன் முதல் சென்ற காட்சி என்றும் மறக்க முடியாதது. சமரஸத்திற்காக ஒரு "கலகக்காரர்" வைஸ்ராயின் வீட்டிற்குள் நுழைந்தார்!

. வைஸ்ராய் வீட்டின் தோற்றம் மாறி விட்டது. ஆடம்பரமாக உடுப்புக்களையணிந்த நூற்றுக்கணக்கான சேவகர்கள் அவரவர்கள் ஸ்தானத்திலிருந்து எட்டிப் பார்த்தார்கள். மகாத்மா உள்ளே நுழையும் போது எல்லோரும் மரியாதையாக தலை வணங்கினர்கள். நேசமனப்பான்மையுடன் போலீஸ் ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஆவல் பொங்க அசையாமல் நின்றர்கள். வைஸ்ராயின் மெய்க்காப்பாளர்கள் மிக்க மரியாதை காண்பித்தார்கள்.

இந்திய, அயல்நாட்டுப் பத்திரிகைக்காரர்கள் அத்தனை பேர்களும், காட்சியை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இர்வின் பிரபுவும் மகாத்மாவும் வைஸ்ராய் ஆபீஸிற்குள் சென்ற பிறகு, வைஸ்ராய்வீடு பழையபடி மாறிற்று. சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் படங்களை அங்கிருந்தவர்கள் அவ்வளவாக அதற்குமேல் ரஸிக்கவில்லை. எனவே

*லக்ஷ்மணபுரியில் செய்த ரேடியோ பிரசங்கம்.

பத்திரிகைக்காரர்கள் ஒவ்வொருவராக இடைவேளை சிற்றுண்டிக்காகச் சென்றுர்கள். நான் மாத்திரம் அங்கேயே இருந்தேன். நான் அங்கு செய்யவேண்டிய வேலை ஒன்றும் இல்லை. அமைதியை இழந்த ஒருவனை ஒருவேலையும் இல்லாமல் ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கச் செய்வதைக்காட்டிலும் கடுமையான தண்டனை வேறு ஒன்றுமில்லை. ‘எப்பொழுது கதை முடியும்? எப்படி முடியும்? நான் அக்கதையை மற்றவர்களுக்கு முன் தெரிந்துகொள்வேனு?’ என்ற கேள்விகள் என்னை வாட்டின. இரவும் பகலும் மகாத்மா உள்ளே நுழைவதையும், வெளியே போவதையும்தான் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா? கதையின் சுவாரஸ்யமான பாகத்தை அறிய வேறு வழி இல்லையா?

இப்படி நான் யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது ஒரு மங்கின குரல் என் காதில் விழுந்தது. மகாத்மா உட்கார்ந்திருந்த இடத்தைப் பற்றியும், அவர் வைஸ்ராயுடன் பேசும் தோரணையைப்பற்றியும், அவர்கள் சிரித்த சிரிப்புகளைப்பற்றியும் யாரோ ஒருவன் பேசிக் கொண்டிருந்தான். கொஞ்சம் சிரமப்பட்டு, இப்படி பேசிக்கொண்டிருக்கும் வேலைக்காரர்கள் (சப்ராஸிகள்) கூட்டம் ஒன்றைக் கண்டுபிடித்தேன். அவர்கள் அங்கு அடிக்கடி வரும் ஜமாதார் சொல்லுவதையும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த காட்சி என் ஆவலைக் கிளப்பியது. இங்குதான் கதையின் ஸ்வாரஸ்யமான பாகம் சில மாறுபாடுகளுடன் சொல்லப்பட்டு வந்தது. எப்படி அந்த பெரிய மனிதர்களிருவரும் (லார்ட் இர்வினும் மகாத்மாவும்) கணப்பின் முன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், எப்படி எரியும் விறகுகளைத் தள்ளிக்கொண்டிருந்தார்கள், எப்படி வைஸ்ராய் மகாத்மாவுக்கு ஆகாரம் சாப்பிட கோப்பை ஒன்றைக் கொடுத்தார், எப்படி அவ்விருவரும் எழுத்து மூலமாகப் பேசினுர்கள்; என்பதெல்லாம் அங்கு வெளிவந்தன.

இந்த விஷயங்கள் எல்லாம் அப்படியே பத்திரிகைகளில் வெளிவந்தன. வெளிநாட்டுப் பத்திரிகைக்காரர்களின் கோபம் அதிகரித்தது. ஒரு வேளை இந்தியாவில் பத்திரிகைக்காரர்களிடத்தில் பக்ஷபாதம் பாராட்டுகிறுர்களோ என்றுகூட சந்தேகித்தார்கள். நான் இப்படியே மனிதவர்க்கத்தின் பேச்சுகளிலிருந்தே செய்திகளை யறியலாம் என்று தெரிந்து கொண்டேன். நான் எப்படி இந்த சங்கதிகளைத் தெரிந்துகொண்டேன் என்று என்னைப்போன்ற பத்திரிகைக்காரர்கள் திகைத்தார்கள்!

இந்தியர்கள் எவ்வளவுதான் படிக்காதவர்களாக இருந்தாலும் முகத்தோற்றத்திலிருந்தும் இன்னும் சில சூட்சுமமான அடையாளங்களிலிருந்தும், சங்கதிகளைத் தெரிந்து கொள்வார்கள் என்பது வெளிநாட்டுப் பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியவில்லை. இப்படி அந்த சாப்ராஸிகள் வம்பளப்பை நான் கவனிப்பதை அவர்கள் அறியவில்லை.

இப்படி 19 நாட்கள் கழிந்தன. மகாத்மா வருவதையும் போவதையும்தான் நான் பார்த்தேன். வேறு எந்த பத்திரிகைக்காரரும் அங்கு வருவதில்லை. சேவகர்கள் வம்பளப்பில் கூட ஸ்வாரஸ்யமில்லாமல் போய்விட்டது. என் வேலையிலேயே எனக்கு புத்தி போகவில்லை. திரும்பிப்போய் ராயிடம் நடந்ததை மாத்திரம் சொல்லி வேறு ஒன்றும் அறிய முடியவில்லை என்று சொல்லிவிடலாம் என்று கூட எண்ணினேன். ஆனல் அன்று மாலை மகாத்மா வைஸ்ராய் வீட்டை விட்டுப்போன சிறிது நேரத்திற்கெல்லாம் வைஸ்ராயின் நிர்வாக சபை மெம்பர் ஒருவர் கார் வந்து நின்றது. மற்றென்று வந்தது. இன்னும் ஒன்று வந்தது. நான் திடுக்கிட்டேன். எல்லா அங்கத்தினரும் வந்தார்கள். ஏதோ நடந்துகொண்டிருக்கிறது! காத்துக் கொண்டிருந்தேன்; மீடிங் ஒருமணி நேரம் நடந்தது. முடிந்தவுடன் ஒவ்வொருவராக அங்கத்தினர்கள் வெளியே சென்றுர்கள். தைர்யப்படுத்திக் கொண்டு கடைசியாக தன் காரை நோக்கிப் போகும் அங்கத்தினரிடம் சென்றேன். தன்னுடன்கூட உட்கார என்னை அவர் அழைத்தார். “நான் உங்களுடன் வந்து ஒரு கப் காபி சாப்பிடலாமா?” என்று கேட்டேன். பிறகு மனதை உருக்கும் குரலில், “நான் மூன்று வாரமாக அன்ன ஆகாரமின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பொறுமை என்னைவிட்டுப் போய்விட்டது. நீங்கள் என்னைப் பார்த்தபோது நான் பட்டினியுடன் இருந்தேன். ஆ! இந்த துன்பங்களெல்லாம் எப்பொழுது முடியப்போகிறதோ தெரியவில்லை” என்றேன்.

அன்பு ததும்ப “உங்கள் கஷ்டங்கள் எல்லாம் சீக்கிரத்தில் நிவர்த்தியாகும்” என்று அவர் ஆறுதல் கூறினுர். அவர் இருப்பிடத்துக்குச் சென்றேம். காபி கொண்டுவா உத்தரவிட்டார். ஆனல் நான் அதற்காகக் காத்

திருக்க முடியாது. அவர் கூறிய ஆறுதலில் உண்மையிருந்தால் நான் அதன் பிறகு நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை அறிய வேண்டும். ஆகையால் என் வேலை அவசரத்தால், அவருடன் காபி அருந்த முடியாததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடைய காரிலேயே வைஸ்ராய் வீடுவந்து சேர்ந்தேன். நான் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மகாத்மா கார் வந்தது!

இந்த எதிர்பாராத நிகழ்ச்சிகளை ராயிடம் தெரிவிப்பதா வேண்டாமா என்று என் மனம் அலைந்தது. அமைதியாக நடக்கப்போவதைக் கவனிக்க நிச்சயித்தேன். மற்ற செய்தி வேட்டைக்காரர்கள் எல்லாம் இதைத் தெரிந்துகொண்டார்களோ என்று எண்ணினேன். நேரம் ஓடிச்சென்றது. அர்த்தராத்திரியும் கழிந்தது. இரவிலே காவல்புரியும் போர் வீரன் உலாத்திக்கொண்டிருந்தான். என்னை அவன் ஒரு வி. ஐ. டி. உத்தியோகஸ்தன் என்று எண்ணினான் போலும்! எதுவானாலென்ன? ராத்திரியில் 'உன் கச்சேரியில்'நான் இருக்கலாமோ கூடாதோ? என்னை அவன் காப்பாற்றினான்.

இரவு மணி 1-42. திடீரென்று யாரோ ஒருவர் மாடிப்படியில் வேகமாக இறங்கி வரும் சப்தம் கேட்டது. எமர்ஸன் கையில் சில காகிதங்களுடன் விழுந்தடித்துக்கொண்டு வருவதை ஒரு சிறு துவாரத்தின் மூலம் கண்டேன். அவர் மெய்க்காப்பாளர் அறைக்குள் சென்றார். அவர் முகம் சந்தோஷத்துடன் பிரகாசித்தது. அவர் கையில் இருந்தது ஒப்பந்தக் காகிதமா? "அப்படி இருந்தால் மகாத்மா சீக்கிரம் இதை விட்டுப் போவார்" என்று எண்ணினேன். சில நிமிஷங்களுக்கெல்லாம் இர்வின் பிரபு முன்னால் கைநீட்டி வழி காண்பிக்க மகாத்மா மாடிப்படியில் இறங்கி வந்தார். இருவர் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது. "ஒப்பந்தம் ஆய்விட்டது" என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். மகாத்மாவை வாயில் வரையில் வைஸ்ராய் வழிகாட்டி விட்டுச் சென்றபிறகு, மகாத்மா காரில் ஏறிக்கொண்டார். நான் அவரிடம் ஓடினேன். என்னை அவர் ப்ரைவேட் செக்ரிடெரி ஆபீஸில் ஒருவன் என்று எண்ணி விட்டார். "மகாத்மாஜி! ஒப்பந்தத்தைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடுவீர்களா?" என்று கேட்டேன். அவர் எதிர்பாராததாக இருந்தது இந்தக் கேள்வி. "பிரைவேட் ஸெக்ரிடெரி" என்று பதிலளித்தார். ஒரு நிமிஷத்திற்கெல்லாம் இர்வின் பிரபு ஆபீஸிலிருந்து வெளியே வந்தார். ஆச்சரியத்துடன் "நீங்கள் யார், இங்கு என்ன செய்கிறீர்கள்?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். "நான் என் வேலை செய்ய வேண்டிய இடத்தில் இருக்கிறேன், ஸார்" என்று பதிலளித்தேன். "இன்றிரவு ஒப்பந்தத்தைப்பற்றி ஏதாவது அறிக்கை விடப்படுமா?" என்று கேட்டேன். வெகு ஜாக்கிரதையாக "நாளைக்கு தெரிந்து கொள்வீர்கள்" என்று பதில் கூறினார்.

நான் நிச்சயப்படுத்திக்கொண்டேன். என் காரில் ஏறிக்கொண்டு உடனே மத்யதந்தி ஆபீஸுக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன். லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் "காரியக்கமிட்டியின் ஆமோதிப்பை முன்னிட்டு காந்தி - இர்வின் ஒப்பந்தம் கையெழுத்துபெற்றது" என்று செய்தியை பறக்கவிட்டேன். 10, 15 நிமிஷங்களில் செய்தி அவ்விடங்களில் போய் சேர்ந்திருக்கும். மிகவும் தைரியமாகச் செய்துவிட்டேன் காரியத்தை! ஸ்ரீராய் அவர்களுக்கு டெலிபோன் மூலம் நடந்ததைத் தெரிவித்தேன். அவர் என்னை ஆசிகூறி இளைப்பாறச் சொன்னார்.

மற்ற பிரதிநிதிகளுடன் அவர் வெகு தீவிரமாகச் செய்தி ஆராய்ச்சிக்கு ஆரம்பித்தார். ஸ்ரீ. ஜேம்ஸ் மில்ஸ் என் செய்தியை தப்பு என்றுகூடச் சொல்லி அதை உடனே ரத்து செய்யக் கேட்டுக்கொண்டார். ஆனால் நான் சம்மதிக்கவில்லை. என் செய்தி மின்னல் போல் பரவியது. எனக்கு டெலிபோனில் எவ்வளவோ கேள்விகள்! எவ்வளவோ கண்டனங்கள்!

லண்டன் டைம்ஸ் இந்தச்செய்தியைத்தலையங்கப் பக்கத்தின் மேல்பத்தியில் பிரசுரித்தது.

அற்றைத் திங்கள்

(ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.)

கபிலர் மீண்டும் வாசிக்கிறார்.

கடைக்கணற் கொல்வான போ
னேக்கி நகைக் கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்"

கபிலரும் பாரியும் நகைக்கிறார்கள். பாரி மகள் இருவரும் புன்னகை முகத்தில் தேக்கி அங்கே வருகிறார்கள்.

கபிலர்: ஏன் நகைக்கிறீர்கள்?

பாரி மகளிர்: உங்கள் பாட்டைக் கேட்டோம். எங்களையறியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

கபிலர்: என் பாட்டு அங்கே கேட்டதா?

பாரி மகளிர்: நன்றாய்க் கேட்டது. பாட்டின் சுவை எங்கள் வீணையின் சுவையை வென்று விட்டது. மடியிலிருந்த வீணைகளை மறந்து உங்கள் பாட்டில் ஈடு பட்டது எங்கள் மனம்.

பாரி: சிலப்பதிகாரத்திலுள்ள ஆய்ச்சியர் குரவையில் காணப்படுகிற இரண்டொரு பாடல்களை வீணை இசையோடு பாடுங்கள். கபிலர் கேட்கவேண்டுமென்கிறார்.

பாரி மகளிர் பாடுகிறார்கள்:—

"பெரியவனை மாயவனைப் பேருலக
மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக்
கண்ணுங்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணுத கண்ணென்ன
கண்ணே
கண்ணிமைத்துக் காண் பார்தங் கண்
ணென்ன கண்ணே!

பாட்டுத்தான் படர்ந்த நிலவில் கரைந்ததா? அல்லது நிலவுதான் பாட்டில் கரைந்ததா? கபிலர் பாட்டின்பத்தில் கண்களை மூடிவிட்டார்.

இதற்குள் யாரோ ஒருவர் வருகிற சப்தங் கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறார் கபிலர்.

கபிலர்: வாருங்கள், எப்படி வந்தீர்கள் இந் நேரத்தில்?

கபிலர்: இவர் யார் தெரியுமா?

பாரி: தெரிய பாக்கியம் புரிந்திலேன்.

கபிலர்: இவர்தான் இயற்கைப் போற்றியார் சிறந்த கவி. என் பாட்டில் ஏதாவது ஒரு நயமிருக்குமானால், இப் பெரியாருடைய அனுக்கிரகந்தான்.

பாரி: உங்களைப் பற்றிக் கபிலர் அடிக்கடி சொல்வதுண்டு. இன்றுதான் என் சிற்றில் பாக்கியமடைந்தது.

இப்பெரியவரை வணங்குங்கள் என்று தம் மகளிருக்கு உத்தரவு அளிக்கிறான் பாரி. பாரி மகளிர் வணங்குகிறார்கள். நல்ல கணவர்களைப் பெற்று இசைபட வாழ வேண்டும் என்று சொல்லுகிறார் அக் கவி.

பாரி: இரவு தங்கலாமா? வழி நடந்திளைப்பு. உண்டி யருந்திப் போகலாமே.

இயற்கைப் போற்றியார்: "இல்லை— என் மனைவி குழந்தைகள் மலையடி வாரத்தில்"— என்று ஆரம்பித்தார்.

பாரிக்குக் கண்ணில் ஜலம் வருகிறது. கஷ்டப்படுகிற ஒரு குடும்பப்படம் அவன் முன் நிற்கிறது. ஒரு சிவிகை நிறைய ஆகாரத்தை வைத்தான். மற்றொரு சிவிகையில் அவரை உட்கார வைத்து பாரி வழி கொண்டு விட்டான்.

பாரி: புலவர்கட்கு ஏதோ இப்பேர்ப்பட்ட வறுமை. பணத்தைச் சரிவர நல் வழியில் செலவு செய்யும் புத்தியுள்ளவருக்குத் தரித்திரம். அறிவில்லாதவர்களிடத்தில் அளவில்லாத செல்வம். ஏனோ இது?

கபிலர்: இது விசித்திர நிலைதான்!

பாரி: இயற்கைப் போற்றியாருக்கு ஓர் ஊர் நல்கலாமென்று நினைக்கிறேன்.

கபிலர்: தக்கதே நினைத்தாய்.

* * *

சில நாட்கள் கழிந்தன. சேர சோழ பாண்டியர் இம் மூவர்களும் ஒரு பெரிய

சூழ்ச்சி செய்து பறம்பு மலையைக் கைப் பற்றிப் பாரிவள்ளலையும் இரக்க மின்றிக் கொன்றனர். பாரிமகளிரையழைத்துக் கொண்டு கபிலர் போகிறார். கண்ணீர் வார அம் மூவரும் பறம்பு மலையைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார்கள். எத்தனை எண்ணங்கள் தழைத்த மலை! எத்தனை கனவுகள் கண்டமலை! எத்தனை ஆசைகள் மலர்ந்தமலை! எத்தனை நினைவு மணங் கமிழ்ந்த நீள் வரை!

ஓரிடத்தை யடைகிறார்கள். அன்றே போல் இன்றும் நிலவு வீசுகிறது! இயற்கையில் மாறுதலில்லை; துயரினால், உள்ளத்தில் பெரிய மாறுதல்; சொற்கடந்த கஷ்டம் தாங்காமல் பாரிமகளிர் கதறுகிறார்கள்.

“ அற்றைத் திங்களவ் வெண்ணிலவி
னெந்தையு முடையேமெங்குன்றும் பிறர்
கொளார்
இற்றைத்திங்களிவ் வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார் யா மெந்தையு
மிலமே ”

பாரி மகளிர் வீணை நாதங் கேட்ட இடத்திலே பகைவர்கள் முரசொலி கேட்கிறது. கபிலர் இன்பக் கவிதை பாய்ந்த இடம் குதிரை லாயமாய்ப் போய்விட்டது! தானந் தழைத்த இடம் பாவ பண்டாரமாய் விட்டது. நிலவு ஒன்றுதான்; காட்சிகள் வேறு.

பாரிமகளிர் நிலவை நோக்குகிறார்கள். மலையை நோக்குகிறார்கள். வார்த்தைகள் நெஞ்சில் சிக்கிக்கொள்கின்றன. சில நிமிஷங் கழித்து சிற்சில மொழிகள் தங்களறியாமல் வழிகின்றன.

“ எங்கள் குருவே, அறங்காக்குமென்று அடிக்கடி சொல்வீர்களே. ‘அறங்கொடிது, அறங்கொடிது’ என்று சொல்லும்படி நிலை வந்து விட்டதே. முன்னூறு கிராமங்கள் அளித்தாரே எங்கள் தந்தை. ஒரு நல்லவர் இருந்தால் அவருக்காவது எதுவும் கைகூடுமென்று சொல்லுவார்களே. முன்னூறு கிராமவாசிகளில் ஒருவராவது எம் தந்தையை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்காமலிருப்பாரா? அன்றிரவு எங்களை வாழ்த்திப் போனாரே ஒரு பெரியவர். அவர் ஆசியும் வீண்தானோ?”

கபிலர் பேசவில்லை; மலையைப் பார்த்த வண்ணமே கண்ணீர் சொரிகிறார். பாரி மகளிர் பாடிய பாட்டை வாசிக்கும் நமக்கும் அற்றைத்திங்கள் நினைவு வராமற் போகாது. நாமும் பறம்புமலையைக் கபிலர் போல் கண்ணீர் வழிகிற முகத்தோடு நோக்குவோம்.



எட்டாத மலர்

(ஸ்ரீ வி. எஸ். சுப்பையா.)

நடேசன் சென்னையில் 'புளு ஷாப்' பில் மானேஜராய் இருந்தான். மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த அவனுக்குச் செலவு அதிகமில்லை. நண்பர்களும் அதிகமில்லை. ஷாப்பிலேயே தனியாக ஓர் அறையிலிருந்தான். ஷாப்பின் சொந்தக்காரர் அவன்மேல் ஒரு அலாதி அன்பு கொண்டிருந்ததோடு சகலத்திற்கும் அவனையே நம்பினர்.

நடேசன் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவன். அவனுடைய அன்னை அவனுடைய சிறுவயதிலேயே இறந்துவிட்டாள். செல்வவந்தரான அவனது தந்தை வேறொரு பெண்ணை மணந்து உலக இயல்பிற்கேற்ப அவள் வார்த்தையை மீற முடியாமல், நடேசனைச் சற்றுக் கடினமாகவே நடத்த முற்பட்டார். நடேசன் பி. ஏ. படித்துப் பட்டம் பெற்றவன். மனம் உடைந்து ஒருவருக்கும் சொல்லிக்கொள்ளாமல் சென்னை வந்து சேர்ந்து அவனுடைய நண்பன் ஒருவன் உதவியால் பிரஸ்தாப முதலாளியிடம் வேலைக்கமர்ந்து நாளாவட்டத்தில் மானேஜர் பதவி பெற்றான்.

நடேசனுக்கு இருபத்தி மூன்று வயது இருக்கும். நகரத்தில் இருந்தாலும் கிராமத்தைப்பற்றி நினைவுகள் அவன் மனதில் எப்பொழுதும் குமுறிக் கொண்டிருக்கும். பொதுவாகத் தன் ஊரையடுத்த வயல்களும், அதில் நடுகை, அறுப்பு முதலிய காலங்களில் உழவர்கள் செய்யும் வேலைகளும், ஏர் உழவும், ஏற்றப்பாட்டு முதலியவைகளும் அவன் மனதில் இடையறாத இன்பத்தைக் கொடுப்பவைகளாயின.

திடீரென்று கிராமத்தைப்பற்றி நினைத்துக் கொள்வான். உடனே சங்கிலித் தொடர்போல் அவனுடைய பால்ய வயதில் நடந்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்கும். "சே! இந்த வேலையை விட்டுப்போய் ஒரு கிராமத்தில் குடியேறி விடலாமா?" என்று நினைப்பான். மறுசமயம் "நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு கிராமத்திற்குப் போனால் நல்லது" என்று நினைக்கும் அவன் மனம்.

அவன் பொழுது போக்குக்காக வாசிப்பவைகள் பாரதியார் பாடல்களும் அவர் பாணியை பின்பற்றியவைகளுந்தான்.

நாட்கள் சென்றன. தந்தையோ அல்லது மற்ற உறவினரோ அவனிடம் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. அதைப்பற்றி அவனும் ஒரு சிரத்தையெடுத்துக்கொள்ளவில்லை.

பாலசுந்தரம் அவனது பால்ய நண்பன். இருவரும் ஒன்றாக வாசித்தவர்கள். உலகத்தில் தன்னைப்பற்றி அக்கரை கொள்பவன் அவன் தான் என்பது நடேசன் எண்ணம். அந்த வருஷம் சித்திரை மாதம் பாலசுந்தரம் இருக்கும் கிராமத்திற்குச் சென்று ஒரு மூன்று மாதம் தங்கப்போவதாக எழுதியனுப்பினான். பாலசுந்தரம் வெகு குதூஹலமாக அதை வரவேற்றுப் பதில் எழுதினான். அவ்வாறே நடேசன் அந்த வருஷம் கூடநல்லூருக்குப் போய்ச்சேர்ந்தான். பாலசுந்தரம் அவனுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்ததைப் பார்த்த நடேசன் 'கிராமத்திற்கு வந்தோம்' என்ற மகிழ்ச்சியிலேயே பூரித்துப் போய்விட்டான்.

கூடநல்லூர் நடேசனுக்கு முற்றிலும் புதிது. ஆனால் அவன் கற்பனைக் காட்சிகள் அங்கு மலிந்து கிடந்தன. பார்க்கும் இடம் எல்லாம் ஒரே பச்சைப் பசுங்கொடிகள். நீர்வளம் மலிந்த பிரதேசம். காலையில் எப்பொழுதும் பாலசுந்தரம் வேலையின் மிகுதியினால் அவனோடு சென்று வருவதற்கில்லை. எனவே நடேசனே அதி காலையில் எழுந்து நெடுந்தூரம் சென்று திரும்புவான். காலையில் கேட்கும் பறவைகளின் கூக்குரலும் சில்லூறின் 'ஙொய்' என்ற சப்தமும் அவன் காதுகளில் இன்பத் தேனைப் பிழிந்தது. பசுமை மயமும் அவற்றைக் கிழித்துக்

கொண்டு செல்லும் நீரோடைகளும் வரண்ட மனதில் பூரிப்பை அள்ளித் தெளித்தன.

ஒரு நாள் அதிகாலையிலேயெ எழுந்து தெற்கு முகமாய்ப் புறப்பட்டு ஒரு மைல் தூரம் வந்துவிட்டான். அப்பொழுது தான் கிழக்கு வெளுத்தது. காலை நேரத்தின் உற்சாகத்தால் நேரத்தைக் கூடக் கவனிக்காமல் வந்து விட்டது அவனுக்கே ஆச்சரியத்தை விளைவித்தது. சாலையோடு சென்றுக்கொண்டிருந்த அவன், மேற்கு முகமாய், மழை காலம் மட்டும் நீரோடி மற்ற காலங்களில் வரண்டு கிடக்கும் ஒரு காட்டு வாய்க்கால் வழியே திரும்பினான்.

அதன் இரு பக்கத்திலும் மாந்தோப்புகள் அடர்ந்து, வேலியைத் தாவிக்கொண்டு கிளைகள் வாய்க்காலுக்குள் கவிந்து கிடந்தது கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. அக்காலைவேளையில் தென்றல் 'ஜில்' லென்று மெல்லென வீச, பனியால் குளிர்ந்த மணலில் 'சறுக்' 'சறுக்' கென்று நடந்து சென்றதில் ஒரு அலாதி இன்பத்தை அடைந்தான் நடேசன். மாந்தோப்பு நீண்டுகொண்டேயிருந்தது. கால் ஓயவே அங்கு சற்று உட்காரலாமா என்று நினைத்தான். அதேசமயம் சற்று தூரத்தில் அவன் திருஷ்டியில் இயற்கையோடியைந்து நிற்கும் ஒரு பெண்மையின் லாவண்யம் ஊடுருவிச் சென்றது.

நடேசன் ஆச்சரியத்தாலும் பிரேமையாலும் கட்டுண்டான். அதிகாலையில் அவ்விளம்பெண் அங்கு எப்படி வந்தாள் என்பதுதான் அதற்குக் காரணம். இதற்குள் அப்பெண்ணின் அருகில் வந்துவிட்டான்.

அவனுடைய ஆயுளில் ஒருதரமாயினும் அவ்வளவு குளிர்ச்சி பொருந்திய முகத்தைக் கண்டதில்லை. அம்முகத்தில் தான் என்ன தேஜஸ்!

பதினைந்திலிருந்து பதினறுவது படியிற் காலை வைத்துக்கொண்டு நிற்கும் அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றிலும் பெண்மையின் முழு ஒளியும் பிரகாசிக்கத் தொடங்கியிருந்தது. அவளுடைய நீண்ட கேசம் கிராம வழக்கப்படி அள்ளி சொருகிவிடப்பட்டிருந்ததில் அவன் கண்ட எழில் அவனை ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போயிற்று.

நடேசனைக் கண்டதே அப்பெண் வினயத்தோடு பார்த்து,

"சாமி! கொஞ்சம் ஒரு கை கொடுத்துத் தூக்கி விட்டுடுறீங்களா?" என்றாள். வீணையின் நாதத்தையும் தோற்கடிக்கும் அவ்வின் குரலோடு சற்று சம்பாஷிக்க எண்ணிற்று அவன் பேதை மனது.

"நீ யாரு? இவ்வளவு சீக்கிரத்திலே இவைகளோடு எங்கே போனாய்?" என்றான், அவள் அருகில் இருந்த காய் கறிக் கூடையைச் சுட்டிக் காட்டிக் கொண்டு.

"கூடலூருக்குப் போறேன் சாமி! இன்னிக்கி வெள்ளிக்கிளமெ இல்லியா, ஒருவர் சொல்லி அனுப்பியிருந்தாரு".

"அப்படியா? இவைகள் எங்கு பயிராகின்றன பசுங்காய்களாயிருக்கே."

அவள் வதனத்தில் ஒரு புன்னகை தோன்றி மறைந்தது. "எல்லாம் எங்க தோட்டத்தில்தான் பயிராவுது."

"அது எங்கேருக்கு?"

"இங்கேருந்து கூப்புடு தலவு போனதும் வலதுகைப்பக்கம் பார்த்தா எங்க தோட்டம் தெரியும்."

"நல்லது! நீ தனியாய்ப்போறயே. இவ்வளவு சீக்கிரமாவும் வந்துவிட்டாய்."

"என்ன தனி சாமி? நீங்களெல்லாம் இந்த ஊரிலே இருக்கையிலே இந்த ஏழைங்களுக்கு என்ன பயம் சாமி? அப்படிப் பயமிருந்தா இவ்வளவு காலமா தோட்டத்திலே நானும் எங்க அம்மாவும் தனியா இருக்க முடியுமா? தோட்டத்திலேதான் காய் கிடைக்குமா?" என்று சொல்லி 'களுக்' கென சிரித்தாள்.

நடேசனின் பரிசுத்த இருதயத்தில்அவ்வுருவம் நன்கு ஒட்டிக்கொண்டுவிட்டது. அடடா என்ன மலர்ச்சி? அவர் சும்மாவா பாடிவைத்துவிட்டுப் போனார்? "காதல் புரியும் அரம்பையர் போலிளங் கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு" என்று?

"இத்தெ கொஞ்சம் தூக்கிவிடுங்கோ சாமி" என்று கூறிக்கொண்டே முந்தானியால் 'சும்மாடு' சுற்றினாள். சுற்றித் தலையில் வைத்துக்கொண்டதும் இருவரும் அந்தக் கூடையைத் தூக்கினர்.

உடனே சும்மாடு பிரிந்து கீழே விழுந்து விட்டது.

"ஐயையோ! கொஞ்சம் பொறுங்கோ சாமி! சரியாய் வைக்கல்லையே!" என்றாள் அப்பூங்கொடி.

அவன் திரும்பி அவள் பின்னாலேயே நடந்தான்.

"சாமி! நீங்க ஒரு வாட்டி தோட்டத்துக்கு வாங்க......வாரீங்களா......"

"சரி உம்பேரு!"

"என் பேரு...கோமதி...."

சாலையை அடையும் வரை பேசிக் கொண்டே வந்தனர். சாலையை அடைந்ததும் அவள் ஒரு ஒற்றயடிப்பாதை வழியாய் ஊரை நோக்கினாள். அவள் பின்னால் போக விழைந்தான் நடேசன். ஆனால் சரியல்லவென்று புத்தியிற்படவே, வழியே திரும்பினான். மறையும் வரை பார்த்த கண் வாங்க முடியவில்லை.

அன்று இரவு முழுவதும் கோமதியின் முல்லைச் சிரிப்பு அவனைத் துன்புறுத்தியது. மறுநாள் அதிகாலையிலெழுந்து நண்பனிடம் கூறிவிட்டு கோமதியின் தோட்டத்தை நோக்கிக் கிளம்பினான். வெகு சீக்கிரம் அதை அடைந்து விட்டான்.

காலையிளம் பரிதி சிவந்த மேகங்களுக்கிடையில் எழுந்துகொண்டிருந்தான். மரம் செடி கொடிகள்யாவும் மரகதம்போல் பிரகாசித்தன. கமலைக்கூனிலிருந்து விழும் சப்தம் இடையிடையே நிசப்தத்தை உடைத்துக்கொண்டிருந்தது. பரபரப்பான அவனது விழிகள் ஆவலோடு தேடின. ஒருசெடிமறைவில் பாத்திகளுக்கு ஜலம் மாறிக்கொண்டிருக்கும் கோமதியைக் கண்டுபிடித்துவிட்டான்.

"கோமு! இதோ யாரோ ஒரு சாமி வந்திருக்காரு" என்று கூவிச்சொன்னான் கவலையடிப்பவன். மாடுகளும் மேல் மூச்சுவாங்க நிமிர்ந்து கோமதியை நோக்கின.

இவ்வளவு நேரமும் வேலையிலீடுபட்டிருந்த கோமதி "என்ன தாத்தா!" என்று கூறி நிமிர்ந்தாள். அவளது விழிகளில் நடேசனின் உருவம் பட்டது.

"வாங்க சாமி! நான் உங்களே—என்று கூறி நிறுத்திவிட்டு, கவலையடித்தவனை நோக்கி,

"தாத்தா! இன்னிக்கி தண்ணீர் போதும், மாடு மூச்சுவாங்கிப்போச்சு!" என்று உத்தரவிட்டாள்.

நடேசன் தோட்டத்தின் வளப்பத்தை நோக்கினான். பலவித காய்கறிகள் பயிராக்கப்பட்டிருந்தன. ரோஜா முதலிய புஷ்பச் செடிகள் சூழ்ந்த அந்த சிறு வீடுதான் அவர்கள் குடியிருக்கும் வீடு என்று நினைத்தான். "வாங்க!" என்று அந்த வீட்டை நோக்கி கோமு முன் நடக்க நடேசன் பின் தொடர்ந்தான்.

ஓடுபோட்ட சிறுவீட்டுக்குப் பின்னால் மாட்டுக்கொட்டில் நன்றாகமெழுகிக்கோலம் போடப்பட்டிருந்தது. ஒரு கோணப் பாயை விரித்து, 'இருங்க சாமி!' என்றாள். நடேசன் சொர்ப்பன உலகில் சஞ்சரித்தான்.

* * *

இப்படிப் பல நாள் அவர்கள் மத்தியிற் றோன்றிய அன்பின் முதிர்ச்சிக் கனுவிலிருந்து காதல் விதைப் 'பழம்' என்று தெரிந்தது. ஆனால் அந்தோ! இருவரும் ஒருவர்க்கொருவர் ஊமையாயினர்.

அவனோ நகரவாசி. படித்தவன். சாதி வேறு. அவள் கிராமப்பெண். எவ்வாறு முடியும்? அங்கு போனபொழுதெல்லாம் காய்கறிகள் வாங்கி வந்து தன் நண்பன் வீட்டுக்குக் கொடுப்பான்.

கோமதியின் தந்தையின் இரத்த வேர்வை அத்தோட்டத்தின் செழிப்பு. அவன் அத்தோட்டத்தை உண்டாக்கி குக் கிராமத்தைவிட்டுத் தைரியமாய் அங்கு வந்து குடியேறினான். அதற்குள் காலமாகி விட்டான். கோமு ஒரே பெண். தாயும் மகளும் அங்கு தங்கி வேலையாட்களை வைத்து தோட்டப்பயிரை உண்டாக்கினர்கள். அவர்கள் துணைக்கு ஒரு கிழவன்தான். அவன்தான் கமலையடிப்பவன்.

கோமுவின் தாய் பரம்பரையான சம்சாரி. குடும்பத்திலிருந்து வந்தவளாகையால் பயிர் ஜோலியை மிகவும் கெட்டிக்காரத்தனத்தோடு நடத்திவந்தாள். கூடலூர் கிராமத்தில் பெரிய மனிதர்கள் யாவரும் அன்னம்மாள் தோட்டத்திலேயே தங்

களுக்கு வேண்டியவைகளை வாங்கிக்கொள் வார்கள். அவர்களிடம் நன்மதிப்பும் உண்டு.

அன்னம்மாளின் ஆசை கோமதிக்கு சீக்கிரமாகவே கல்யாணம் பண்ணி தன் னுடேயே வைத்துக்கொண்டு பயிர்த் தொழிலை இன்னும் செம்மையாக நடத்த வேண்டும் என்பது. இந்த விஷயத்தைப் பற்றி அவள் தனக்கு மிகுந்த பழக்க முள்ளவர்களிடத்திற் சொல்லி அவர்கள் யோசனையையும் கேட்பதுண்டு.

கூடலூர் அருணாசல முதலியார், அன்னம்மாளிடம், "இந்தா அன்னம்மா! கோமு புத்தியும் லட்சணமும் நிறைந்த வள். கிணற்றில் கொண்டு தள்ளிவிடாதே உன் கத்திரிக்காச் செடி மாதிரியில்லை, நூறு வருஷப்பயிர்" என்று சொன்னது அவளுக்கு அடிக்கடி ஞாபகம் வரும்.

பல நாள் யோசித்து இறுதியில் கோமுவைத் தன் குக்கிராமத்திலுள்ள பொன்னப்பன் என்பவனுக்குக் கொடுத்து அவனைத்தன்னுேடு வைத்துக் கொள்வ தாக நான்கு பேரை வைத்து முடிவுசெய்து கொண்டாள். கல்யாணத்தையும் ஆவணி மாதத்திலே மிகவும் சிறப்பாகவும் ஆடம் பரமாகவும் நடத்திவிட எண்ணியிருந் தாள்.

ஒருநாள் மாலை நடேசன் வந்தான். கோமு ஒரு சிறு ஓலைப்பெட்டியில் மாலை யில் மலர்ந்த புஷ்பங்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். அன்னம்மாளும் கிழவ னும் ஜோஸியரிடத்தில் அவள் கல்யாணத் தைப்பற்றிக் கேட்கச் சென்றிருந்தார்கள்.

அவனைக்கண்டதே அவள் மனதிலுள் ளவை அவளை யறியாமலே வெளிவந்தன.

"நான் உங்களே....இப்போ வரமாட்டி யாளா என்னு நினைச்சிக்கிட்டிருந்தேன்" என்ருள்.

"வேணுமானல் இன்னும் இரண்டு மூன்றுதடவைதான் இங்கே வர முடியும்."

"என் அப்புறம்?"

"நான் பட்டணம் போகிறேன்."

"அங்கே எதுக்கு?...."

"நான் அங்கேதானிருக்கிறேன். நான் என் நண்பன் வீட்டிற்கு சும்மா கிராமத் தைப் பார்க்க வந்திருக்கிறேன்."

"அங்கே தான் உங்க அப்பா அம்மா எல்லோரும் இருக்காங்களா?"

"இல்லை, அவர்கள் இறந்துவிட்டார் கள்..."

"ஐயோ பின்னே அங்கே யாருயிருக் காரு?"

"ஒருவருமில்லை"

கோமு முகத்தில் மந்தஹாஸம் அரும் பிக்கொண்டிருந்தது. அவனை அழைத்துக் கொண்டுதிண்ணையில் கோரைப்பாயில் உட் காரும்படி வேண்டினள். அப்பொழுது அவள் முகத்தில் அரும்பிய புன்னகை மறையவில்லை. நடேசன் அவள் ஏதோ தன்னிடம் கூற ஆத்திரப்பட்டுக்கொண் டிருப்பதாக அறிந்து அதை அறிய விரும் பினன்.

"என் சாமி என்னையும் உங்க பட்ட ணத்திற்கு அழைத்துக்கொண்டு போறீங் களா?" என்று கேட்டாள் திடீரென்று. நடேசன் உணர்ச்சி மிகுதியால் பதுமை போல் அவளை மலர விழித்தான். உடனே தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான்.

அப்பொழுதுதான் வெள்ளி போல் விளக்கிய ஒரு டம்ளரில் பசுவின் பாலைக் கொண்டுவந்து கோமதி "இப்போதுதான் கறந்தது" என்று வைத்தாள்.

பாலை அருந்திவிட்டு நிமிர்ந்து பார்த் தான்...முன்னினும் ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தது அவள் மனம்...அவள் முகத்தில் அரும்பிய புன்னகை நன்கு மலர்ந்து விட்டது.

"என்சாமி...நான் மட்டும் உங்க ஜாதி யாயிருந்தா என்னைக் கல்லாணம் பண் ணிக்குவீங்களா?" என்று கோமதி கேட்டு விட்டாள் உணர்ச்சியின் வேகத்தைத் தாங்கமுடியாமல்.உடனே அவள் மனத்தில் என்ன உதித்ததோ, சட்டென்று அவள் முகத்தில் தோன்றிய சந்தோஷம் எங்கோ மறைந்ததோ, ஏனடா இப்படிச் சொல்லி விட்டோம் என்று நினைத்தாளோ...?

கோமதி மறுநிமிஷம் சாணகக் குறுகி நிலைகுலைந்து நின்ருள். நடேசன் அவள் கரத்தைப் பற்றினன்.

* * *

மறு நாள் நடேசன் சென்னைக்குப் பிர யாணமானன். அவன் மனம் உடைந்து போயிருந்தது. மிகவும் துக்கத்தோடு

கோமுவிடம் விடைபெற்றுக் கொண்டான். தன் ஞாபகார்த்தமாக...ஒரு கைக்கெடியாரத்தை அளித்தான். கோமு கைக்குட்டையையும் வாங்கிக் கொண்டாள். மறு வருஷம் எப்படியும் வந்துவிடுவதாகச் சொன்னான். அப்போது அவள் பார்த்த பார்வை அவனை என்னவெல்லாமோ செய்தது...

“இந்தா கோமு! என்கையால் ஒரு புஷ்பத்தை உன் தலையில் வைக்கிறேன்” என்றான்.

மாலை நேரம். மஞ்சள் வெயில் பொற்கதிர்களை பரப்பிக்கொண்டிருந்தது. கொழு கொழுவென வளர்ந்த செடியில் தலை கவிந்து மெல்லிய காற்றில் அசைந்து கொண்டிருக்கும் ஒரு ரோஜாமலரைக் கிள்ள முயன்றான். ஆனால் காற்று அடிக்கவே கிளை மேலே சென்று அவன் கையிலிருந்து தப்ப முயன்றது. கோமதியிடமிருந்து ஒரு பெருமூச்சு பறந்தது. எட்டாத மலரைக் கண்டு அங்கலாய்க்கும் நடேசனின் ஹிருதயம் தன் ஹிருதயத்தை அப்படியே பிரதி பலிப்பதை கோமதி உணர்ந்தாள்.

‘புளூ ஷாப்பில்’ நடேசன் எதையோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“நான் உங்க ஜாதியாயிருந்தால் என்னைக் கல்யாணம் பண்ணிக்குவீங்களா?” என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான். சே! அது பிரேமை!........

தன்னுடைய நிலைமையை எண்ணித் தானே சிரித்துக் கொண்டான்.

“லோகத்திலே நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.” ஆகவே நடேசனின் கிராம விஜயம் அவனுடைய வாழ்க்கையில் ஒரு சம்பவமாகத்தான் ஆயிற்று. ஆனால் கோமதிக்கு?

அவன் ‘புளூ ஷாப்பின்’ சொந்தக்காரரின் மகள் கழுத்தில் மூன்று முடி போட்டு வைத்தான்! பின்பு அவன் ஏன் கிராமத்திற்குப் போகிறான்? அவன் கிராம விஜயம் ஸ்வப்பனமாயிற்று!

ஆனால் கோமதி கல்யாணமின்றி இருக்கிறாள். வருஷா வருஷம் அவன் வரவை எதிர்பார்க்கிறாள். அவன் கொடுத்த கெடிகாரம் ஓடாமல் நின்று போய் எவ்வளவோ காலமாயிற்று என்றாலும் அதையே அவனாகப் பாவிக்கிறாள்.

ஹிமவத் கோபாலஸ்வாமிமலை

(ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்)

ஹிமவத் கோபாலஸ்வாமி மலையானது மைசூர் நகரத்திலிருந்து அறுபது மைல் தூரத்திலிருக்கின்றது. இது நீலகிரி மலைச்சாரல்களின் கடைசிவரிசைமலைச்சாரலைச் சேர்ந்ததாகும். இந்த மலைக்குப் பெயர் கொடுத்திருப்பது போலவே மலைமேல் மிகவும் குளிர்ச்சியாக விருக்கிறது. "ஹிமவத்" என்பதற்குப் பொருள் "பனிபோல் குளிர்ந்தது" என்றும், மலைமேல் ஸ்ரீ வேணுகான லோலன் கோவிலிருப்பதால் கோபாலஸ்வாமி மலை என்றும் வியாக்யானம் செய்யப்படுகிறதல்லவா? மலைமேல் சரியான சௌகரியங்கள் ஏற்படுத்தப் பட்டால் இம்மலையானது கோடைகால வாசஸ்தலத்திற்கு மிகவும் நன்றாக விருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மைசூர் மகாராஜா தற்பொழுது இம்மலை மீது ஓர் அரண்மனை கட்டி முடித்திருப்பதால் நாளடைவில் நீலகிரி, நந்தி, ஏற்காடு, குற்றாலம் முதலிய இடங்களைப் போலவே இதுவும் ஓர் கோடைகால வாசஸ்தலமாக பரிணமிக்கும். ஏற்கனவே அரண்மனை யல்லாமல் மலைமேல் மைசூர் காட்டு இலாகாவால் கட்டப்பட்ட சகல சௌகரியங்களுமடங்கிய அழகிய பங்களாவும் ஒன்றிரண்டு சிறு வீடுகளுமிருப்பதால் பலர் இவைகளில் போய் சில நாட்கள் தங்கி மலையின் அழகைப் பருகி, ஆரோக்கியமடைந்து உல்லாசமாக இருந்துவிட்டு வருகிறார்கள்.

மைசூரிலிருந்து உதகமண்டலத்திற்கு செல்கிற மெயில் பஸ்ஸில் ஏறிச் சென்றால் மைசூர் மற்றும் பிரிட்டிஷ் மாகாணம் கூடுமிடத்திற்குக் கொஞ்ச தூரத்திற்கு இப்புறத்திலேயே ஹங்களா (Hangala) என்னும் ஓர் கிராமத்தில் இறங்கவேண்டும். இவ்விடத்திலிருந்து இரட்டை மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டோ அல்லது கால் நடையாகவோ மலையின் உச்சிக்கு போய் சேருவதற்கு ஆறு மைல் தூரமிருக்கிறது. வழி நெடுக, காட்டின் இயற்கை அழகில் ஈடுபட்டு சிரமத்தை அறியாமலேயே அனாயாசமாகவே நாங்கள் மலையை ஏறிச்சென்று விட்டோம். அந்த இயற்கை வனப்பின் அற்புதத்தை வர்ணிக்க என்னால் இயலாது. மலைச்சாரல்கள் சிப்பாய்களைப்போல் ஒன்றன்பின் ஒன்றாக வரிசை வரிசையாகத் தோன்ற, கடைசியில் நீலகிரியானது அரசன் போல் விளங்குகிறது. இமய மலையைப் போல் கம்பீரமாகத் தோன்றும் இம்மலைச் சாரல்களில் ஆங்காங்கு காட்டுத் தீயானது 'பளிச் பளிச்'சென்று தென்பட, ஆங்காங்கு மலை வழிகளும் தென்படுகின்றன.

இந்த மலையில் புலி, சிறுத்தை, யானை, காட்டெருமை முதலிய காட்டு மிருகங்கள் ஏராளமாக வசிக்கின்றன. மலை ஏறிச் செல்லும் பொழுது ரஸ்தாவின் இரு புறமும் செடி, கொடி, மரங்களாலும், அவைகள் பலவித அழகிய புஷ்பங்களாலும், பழங்களாலும் இயற்கை அன்னையால் அலங்கரிக்கப்பட்டு மிக்க மனோகரமாகத் தென்படுகின்றன. இந்த கானகத்தில் வசிக்கும் பலவித பக்ஷி ஜாலங்கள் இனிமையாகக் கானஞ் செய்ய, புஷ்ப வகைகளின் நறு மணத்துடன் கூடிய சுகந்தக் காற்று வீச, சுற்றிலும் மனோகரமான தோற்றத்தைக் கண்டு களித்த வண்ணம் மலை ஏற ஏற, நமக்கு ஆயாசமே தோன்றுகிறதில்லை. நாம் மலையை ஏறும்பொழுது சுற்று முற்றிலும் காட்டு மிருகங்கள் நடமாடும் பொழுது உலர்ந்த சருகுகளும், புதர்களும் அசைவதால் ஏற்படும் சப்தமும், மூங்கில்கள் காற்றினால் அசைவதால் ஏற்படும் நாதமும் பக்ஷி ஜாலங்களின் இனிமையான கானமும் தவிர வேறொரு சப்தமும் கேட்காது. சில சமயங்களில் மான், முயல், மயில், நரி முதலியவை நாம் செல்லும் பாதையைத் தாண்டிச் செல்வதைக் கூடக் காணலாம். அவைகள் சுயேச்சையாக அவ்விதம் துள்ளிக் குதித்து ஓடுவதைப் பார்ப்பதினாலேயே ஓர் அலாதி

சந்தோஷ முண்டாகிறது. இவ்விதம் மெய்மறந்து இயற்கை விநோதத்தைக் காணும்பொழுதுதான் நாம் பகவான் அருகில் சமீபிக்கின்றோம் என்று சொல்கிறார்களல்லவா? இயற்கையன்னையின் பூரண அருள் நிறைந்திருக்கும் இது போன்ற இடங்களுக்குச் சென்று இயற்கை யன்னையின் வனப்பைப் பருகும்பொழுது தான் இந்த வாக்கியத்தின் தாத்பர்யத்தை உணருகிறோம். இந்த மலையின் காடுகளில் ஓர் வித காட்டு ஜாதியினர் வசிக்கிறார்கள். இவ்வாறு இயற்கை அன்னையின் திருவிளையாடலைக் கண்டு களித்தவாறு சிரமத்தை மறந்தவாறு மலையின் உச்சியை அடைந்தோமானால் கண்ணாடி போல் தெளிந்த ஜலமும், தாமரைப் புஷ்பக் கூட்டங்களும் நிறைந்த மனோகரமான பல குளங்கள் காட்சியளிக்க, அதற்கப்பால் ஸ்ரீ கோபாலஸ்வாமியின் கோவிலும், அதற்கு சற்று தூரத்தில் காட்டு இலாகாவைச் சேர்ந்த அழகிய பங்களாவும் தென்படுகின்றன. மேலே ஏறிச் செல்லச் செல்ல குளிர்ச்சி அதிகரித்துக்கொண்டே வருவதால் நாம் மலை உச்சியை அடைந்ததும் நமக்குண்டான சிரமமெல்லாம் அக்குளிர்ந்த இடத்தில் மாயமாய் மறைகிறது.

ஜனத்தொகையற்ற பிரதேசத்தில் வருஷத்திற்கொரு தடவை ஹிமவத் கோபாலஸ்வாமிக்கு நடைபெறும் உத்ஸவத்தின்பொழுது இவ்விடம் முழுவதும் ஆயிரக் கணக்கான பக்தர்களால் சூழப்பட்டு அழகாகப் பிரகாசிக்கின்றது.

மலையில் சுற்றித் திரிவதற்கு வேண்டிய இடங்களும், வழிகளும் இருக்கின்றன. இந்த மலையின் ஓர் குறிப்பிட்ட இடத்தில் சென்று உட்கார்ந்துகொண்டு சூரியாஸ்தமனத்தைக் கவனிக்குங்கால், மலைச்சாரல்களின் பின்னால் பகலவன் அஸ்தமிக்கும் சமயத்திலேற்படும் அழகைக் கண்டு களிக்க நமது இரண்டு கண்கள் போதாது. மலையின் உச்சியிலிருந்து கீழ்ப்புறம் சுற்றிலும் கவனித்தால், காடுகளின் நடு நடுவில் உள்ள கிராமங்கள் கொலுவில் குழந்தைகள் வைக்கும் பொம்மையைப் போலும் சில கிராமங்களும், நஞ்சை புஞ்சை நிலங்கள் பூவேலை செய்தாற்போல் சதுரமாகவும் தோன்றுகின்றன. ரஸ்தாக்களோ வெள்ளிக் கம்பியைப்போல் தென்பட, அந்த மஞ்சள் வெய்யலில் ஒன்றிரண்டு ஆறுகளும், ஏரிகளும் தங்கத்தை உருக்கிக் கொட்டினாற்போல் 'தள தள'வென்று பிரகாசிப்பதைப் பார்க்கும்போது பரமானந்தமாக விருக்கிறது.

இம் மலை வாசமும், இவ்விட மிருக்கும் ஜலமும் மிகவும் ஆரோக்கியகரமானதென்று சொல்லப்படுகிறது. மலைமேல் நல்ல சுத்தமான தெளிந்த தீர்த்தம் உள்ள பல குளங் குட்டைகளிருக்கின்றன. இவைகளில் மிகவும் பெரியதென்று சொல்லப்படுவது "கோபால தீர்த்தம்" என்பதேயாகும். இது ஓர் மனோகரமான வனத்தின் நடுவில் ஸ்வாமி கோவிலினருகிலேயே இருக்கின்றது. இவ் விடத்தின் நிலம் மிகவும் சாரமானதென்று சொல்லப்படுவதால் மைசூர் சர்க்காரின் காட்டு இலகாக்காரர்கள் சில செடி வகைகளை இவ்விடத்தில் வளர்த்துத் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கன். மைசூர், நீலகிரி, சென்று வருபவர்கள் இவ்விடமும் சென்று இவ்விடத்தின் இயற்கை வனப்பையும் பருகி ஆரோக்கியமும், ஆனந்தமும் அடைவதல்லாமல் எம்பெருமானைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் பெறுவார்கள்.

கடிதம்

சில கெட்ட பழக்கங்கள்

அன்புள்ள ஐயா,

நான் உங்கள் பத்திரிகைக்கு "வெறுப்பை அளிக்கக்கூடிய கெட்ட பழக்கங்கள்" என்று இருபது பழக்கங்களை கண்ணாரக்கண்டு அவைகளை கீழே எழுதியுள்ளேன்.

1. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவைகளை பிடித்துக்கொண்டு, வருபவர்மீது புகையை விடுவது, வழி நெடுக எச்சிலைத் துப்புவது.

2. கள்ளை பருந்தித் தெருவில் வாந்தி செய்து கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து பின் கீழே விழுந்து புரளுவது; ஸ்மரணையற்றுக் கிடப்பது.

3. மாட்டைப் போன்று எதிரே வருபவர்மீது உராய்ந்து கொண்டு செல்வது.

4. கைவிரல் நகங்களை யெல்லாம் அடிக்கடி கடித்துத் துப்புவது.

5. மூக்கைக் கைக்குட்டையில் அடிக்கடி சிந்தி சட்டைப் பைக்குள் போட்டு பத்திரப் படுத்திக் கொள்வது.

6. பத்துப்பேர் போகவர இருக்கும் பாதையில் லச்சையின்றி மலஜலம் கழிப்பது.

7. கோழிகளையும் குருவிகளையும் தலைகீழாகத் தொங்கவிட்டுத் தெருவில் தூக்கிக் கொண்டு செல்வது.

8. மாமிசங்களை பல பேர் பார்க்கும்படி வீதியில் தூக்கிச் செல்வது.

9. டிராம் வண்டிகளிலும், ரயிலிலும் அழுக்கடைந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு செல்வது.

10. புகையிலைப் பொடியைப் பத்துப் பேர் நிறைந்துள்ள இடத்தில் போட்டுக் கொள்வது.

11. ஓயாமல் புகையிலையையும் வெற்றிலைப்பாக்கையும் போட்டுக்கொண்டு குதப்புவது.

12. வைக்கோல் அடைத்த ஒரு கன்றினைக் காட்டிப் பால் கறப்பது.

13. ஹோட்டலில் பலர் அறிய உட்கார்ந்துகொண்டு இட்லியையோ அல்லது வடையையோ இரண்டு கைகளையும் உபயோகித்து விண்டு வாயில் போட்டுக் கொண்டு ஓசைப்படுத்திக் கொண்டே சாப்பிடுவது.

14. காலை நீட்டியபடியும் குந்திட்ட வண்ணமும் உட்கார்ந்துக் கொண்டு அன்னம் உண்பது.

15. க்ஷவரம் செய்து கொண்டு ஸ்நானம் செய்யாமல் சத்தப்படாமல் துணியில் துடைத்துக் கொண்டு அன்னம் உண்பது.

16. ஒரே ஆடையை மேலுங் கீழுமாக மாற்றி எட்டு நாள் உடுத்துவது.

17. ஸ்நானம் செய்த பின் நேற்று உடுத்திருந்த ஆடையையே உடுத்திக் கொண்டு மடிகொண்டாடுவது.

18. ஒரே நாளில் ஐந்து தடவை சிற்றுண்டியும் மூன்று தடவை சோறும் உண்பது.

19. சிற்றுண்டி உண்ட பின்பு கை கழுவாவண்ணம் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டு வெளிக் கிளம்புவது.

20. சதா காலமும் கெட்ட பேச்சுப் பேசிக் கொண்டே யிருப்பது.

இவைபோன்று இன்னும் பல உண்டு. எடுத்துக்கூற இவ்வழக்கங்கள் அருவருப்பைத் தரக்கூடியவை யல்லவா? இன்னும் இவ்வளவு தூரம் நாகரீக முதிர்ச்சியடைந்த போதிலும் நம் நாட்டில் இவ்வழக்கங்கள் நடந்தே தீருமென்று நினைத்தே சுகாதார இலாகாவில் இவைகளைப்பற்றிக் கவனியாமலிருக்கின்றனர் போலும்! கவனியாமல் இருப்பதற்கு முன்னர் நாம் நம்முடைய மனதுக்கு விரோதம் இல்லாமல் நடந்து கொண்டால் நலமாயிருக்கும்.

சி. ஆர். பழநியாண்டி.

பாங்கி முன்னேற்றம்

பாங்கிகளின் லாபம் ஓர் நாட்டின் வியாபார முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் காண்பிக்கிறது. இந்தியாவிலுள்ள பாங்குகளில் இம்பீரியல் பாங்கைத் தவிர மற்ற பாங்குகளெல்லாம் சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் குறைந்த லாபத்தைக் காட்டுகின்றன. இம்பீரியல் பாங்கின் லாபத்தில் அதிகத்துக்குக் காரணம் டிரஷரி பில்களிலிருந்து கொஞ்சம் வரும்படி கிடைத்திருப்பதுதான். மற்ற பாங்கிகளில் ஸென்ட்ரல் பாங்கு ஒன்றுதான் 1936-ம் வருஷத்தைக் காட்டிலும் மிகக் குறைவாக லாபத்தைப் பெற்றிருக்கிறது. இந்த விஷயத்தில் பாங்க் ஆப் இந்தியாவின் லாபத்தை ஓர் சரியான அளவுகோலாக எடுத்துக் கொள்ளலாம். 1938-ம் வருஷத்தில் ஜூன் முடிய அரை வருஷத்துக்கு லாபம் சென்ற வருஷத்தைக் காட்டிலும் சிறிது குறைவாக இருக்கிறது. ஆனால் 1936-ம் வருஷத்தியதைக் காட்டிலும் எவ்வளவோ கூட.

இம்பீரியல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா, ஸென்ட்ரல் பாங்க், பஞ்சாப் நாஷனல், பாங்க் ஆப் பரோடா இந்த கோஷ்டிகளின் மொத்த லாபம் 1938-ம் வருஷத்தின் முதல்பாதிவருஷத்திற்கு ரூ 69·04 லக்ஷங்கள். ஆனல் 1937-ம் வருஷத்தில் முதல் பாதி வருஷத்தில் அவற்றின் லாபம் 72·26 லக்ஷமாக இருந்தது. 1936-ம் வருஷத்தில் ரூ 63·30 லக்ஷம். சென்ற வருஷத்தைக் காட்டிலும் 1938-ல் லாபக்குறைவு 4·5 சதவிகிதம்தான். ஆகையால் இதைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனல் சென்ற மூன்று மாதங்களாக மார்க்கெட் அபிவிருத்தியைக் கவனிக்கும் போது இனிமேல் லாபக்குறைவு இராது என்று சொல்லலாம்.

இந்தியாவிலுள்ள ஷெடூல்டு பாங்குகள் 50 லிருந்து 54 ஆக உயர்ந்திருக்கின்றன. பல ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகள் மத்ய பாங்குடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள வதிலுள்ள நன்மையை அறிந்து கொண்டு தங்கள் பங்கு மூலதனத்தை அதிகரித்துக்கொண்டுவிட்டன.

1937-ம் வருஷம் டிஸம்பரோடு முடிந்த அரை வருஷத்திற்கு சகல செலவும் போக ரிஸர்வ் பாங்குக்கு ரூ. 27,91,200 லாபம் வந்திருக்கிறது. சாதாரணமாக டிவிடண்ட் $3\frac{1}{2}$% கொடுக்கப்பட்டது. பாக்கிப் பணம் 1934ம் வருஷத்திய ரிசர்வ் பாங்க் சட்டப்படி கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டது.

தெற்கே தென்னிந்தியாவில், திருவாங்கூர் நாஷனல் பாங்க் மறைவால் பாங்கி முறைக்கே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. போது ஜன நம்பிக்கை குறையவே தென்னிந்தியாவிலுள்ள பாங்குகளிலுள்ள பணங்களை எடுக்க எல்லோரும் தொடங்கினர்கள். சென்னை சர்க்காரும் ரிஸர்வ் பாங்கும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் ஜனங்கள் பயம் தெளிந்தது. திருவாங்கூர் நேஷனல் பாங்கியின் மறைவு பல பிரச்னைகளைக் கிளப்பி விட்டிருக்கிறது. ஷெடூல்ட் பாங்கிகளை ரிஸர்வ் பாங்க் நடத்தும் விதத்தை இந்த நெருக்கடியின்போது பலர் கண்டித்தார்கள். இந்த பிரச்னைகளைத் தீர்க்க ஓர் தனியான பாங்க் சட்டம் தேவையாயிருக்கிறது. ரிஸர்வ் பாங்குகளுக்கும் மற்ற பாங்குகளுக்குமுள்ள சம்பந்தம் தெளிவாக்கப்படவேண்டும்.

1937-ம் வருஷத்தில் பாங்குகள் பிராஞ்சுகளை விருத்தி செய்தன. பாங்குகளின் மொத்த பிராஞ்சு தொகை சென்ற வருஷம் 828. இந்த வருஷம் 1138. இதனல் பாங்குகள் வாவா வளர்ந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை.

—இந்தியன் பினன்ஸ் வருஷ அறிக்கை

இரு நண்பர்கள்

(ஸ்ரீ எஸ். எல். நாராயணன் பி. ஏ.)

ஒரு நாள் கட்டெறும்புக்கு ஆகாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. வீடு முழுவதும் தேடி அலைந்தது. அதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பசியால் வாடி வருந்தும் சமயம். மூட்டை, மாடியிலிருந்து இறங்கிவருவதைக் கண்டது. கண்டதும் வேகமாய் ஓடிச் சென்று தன் வருத்தத்தை தெரிவித்துக் கொண்டது.

பசியால் வருந்தும் எறும்பைக் கண்டதும் மூட்டைக்கு மனம் இளகியது. "இதற்காகவா அழுகின்றாய்? வா என்னுடன், உனக்கு வேண்டிய தின்பண்டங்கள், அதிலும் நெய்யில் செய்யப்பட்டவை இருக்கின்றன" என்று சொல்லி அதன் அழுகையை நிறுத்தியது. இரண்டும் வேகமாய் மாடிக்குச் சென்றன. "நண்பா, அதோ இருக்கிறது பார். அந்த அலமாரியில்தான் தின்பண்டங்கள் இருக்கின்றன; நீ போய், வேண்டியதைத் தின்று வா. நான் இங்கு ஒருவரும் வராமல் கவனித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்று மூட்டை.

எறும்பும் களிப்புடன் சென்று வயிறார தின்றுவிட்டு, சிறிதளவு எடுத்துக் கொண்டு, "நண்பா நான் போய்வருகிறேன். நீ செய்த உபகாரத்தை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்" என்று கூறி, மூட்டையினிடம் விடைபெற்றுக் கொண்டு ஆடிப்பாடிக் கொண்டே சென்றது.

இரண்டு நாட்கள் சென்றன. மாடியில் ஒருவரும் இரவு தூங்குவதில்லை என்று மூட்டைக்குத் தெரிந்தது. இவ்விதமே பல நாட்கள் கழிந்தால், தன் உயிருக்கு ஆபத்து வரும் என்று பயந்த மூட்டை, மறுநாள் சாயந்திரம், (மணி 4 இருக்கும்) மாடியிலிருந்து மெதுவாக இறங்கியது. வீட்டு வாசற்படியில் தன் நண்பனைக் கண்டதும் சிறிது சந்தோஷம் அடைந்தது மூட்டை.

"வா, வா, இன்று இரவு என்னுடன் தங்கிவிட்டுப் போகலாம்" என்று கூறி, களிப்புடன் தன் நண்பனை அழைத்துச் சென்றது எறும்பு. சில நாழிகை இரண்டும் சல்லாபம் செய்து கொண்டிருந்தன. மணியும் 7 அடித்தது. வீட்டில் விளக்கு ஏற்றப்பட்டது. "நண்பா, நம் வீட்டு எஜமான், இரண்டு நாளாய், மாடியில் தூங்குவதில்லையே, அதன் காரணம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டது மூட்டை.

"அதைத்தான் நானும் உன்னிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். நல்ல வேளையாக, நீயும் வந்தாய். நண்பா, அவர் உன் மேலேயே, கண்ணாயிருக்கிறார். நாளை மாடியை சுத்தம் செய்து

வெள்ளையடித்த பின்தான் அங்கு உறங்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்'' என்று எறும்பு சொல்லிற்று.

அவ்வளவுதான், மூட்டைக்கு கவலை உண்டாயிற்று. "சரி, நான் இனிமேல் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் சமயம். எஜமானர் 'அப்பாடா' என்று கட்டிலில் படுத்துக்கொண்டார். "நண்பா, நீ இங்கே இரு; நான் போய் சிறிது ஆகாரம் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்'' என்று கூறி விரைந்து சென்றது மூட்டை. சென்ற மூட்டை நேராக எஜமான் படுத்திருக்கும் கட்டில் கால் வழியே ஏறி, மெத்தையில் புகுந்து கொண்டது. பின் கேட்பானேன். வயிறு நிறைய பானம் அருந்திவிட்டு, இறங்கும் சமயம். தற்செயலாக அவர் கண்ணில் தென்பட்டு விட்டது. அவ்வளவுதான், மறு நிமிஷம் அவர் கையில் அகப்பட்டுக் கொண்டு தவித்தது.

தன் நண்பன் நிலைமையை அறிந்த-எறும்பு சரேலென்று ஓடி எஜமான் காலை வெடுக்கென்று கடித்துவிட்டுப் பறந்து சென்றது.

"ஐயோ!'' என்று அலறிக் கொண்டு எழுந்தார் அவர். வேதனை பொறுக்கமாட்டாமல் கைகளை உதறிக்கொண்டு கிளம்பினர். தரையில் விழுந்த மூட்டை, "தப்பினேம், பிழைத்தோம்'' என்று வேகமாய் வாசலை நோக்கி ஓடியது. தன் நண்பனை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த எறும்பு, அவனைக் கண்டதும், கட்டித்தழுவி நடந்ததைச் சொல்லிற்று. இருவரும் ஆடிப்பாடிக் களித்தன. அன்று முதல் இரண்டும் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்தன.

இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன்

இந்தியன் மியூச்சுவலின் வருஷாந்திர ரிபோர்ட் வரப் பெற்றோம். 1938-ம் வருஷம் டிஸம்பர் 31 தேதி முடிய முழு வருஷத்தில் அஸோஸியேஷன் செய்த காரியங்களை வருஷ அறிக்கை கூறுகிறது. 'புது பிஸினெஸ்ஸி'லும் ஆயுள் நிதியிலும் விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ரூ. 19,33,250 பெறுமானமுள்ள 1670 பாலிஸிகள் நடைமுதல் வருஷத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த புது பிஸினெஸ் வருஷாவருஷம் ரூ. 1,01,760-2-0 வரும்படியைக் கொடுக்குமென்று நிர்வாகஸ்தர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆயுள்நிதி சென்ற வருஷத்தைக் காட்டிலும் ரூ. 1,37,000 உயர்ந்திருப்பதைக் காண்கிறோம். நடைமுதல் வருஷத்தில் 65 கிளேம்கள் கோரப்பட்டன. அவைகளில் 9 உடனே கொடுத்துத் தீர்க்கப்பட்டன. மற்றவை, வருஷ முடிவில் வந்ததால் அவை பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. எல்லாக் கிளேம்களும் மொத்தம் ரூ. 60, 436-7-0 மதிப்பு.

நடைமுதல் வருஷம் கம்பெனியின் சரிதையில் முக்கியமாக இருக்கிறது. மவுண்ட் ரோட்டிலுள்ள ஓர் அழகிய கட்டிடத்தில் கம்பெனி மிக்க பலத்துடன் நிலைத்து நிற்பதைப் பார்க்கிறோம். அந்தக் கட்டிடம் கம்பெனியின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் அறிகுறியாக இருப்பதல்லாமல் கம்பெனிக்கு மேலும் லாபத்தைக் கொடுக்கும் ஓர் அம்சமாகவும் இருக்கிறது.

வரவு-செலவு ஜாப்தாவைப் பார்க்கும்போது கம்பெனி நிர்வாகத்தின் சிக்கனத்தையும் திறமையையும் பாராட்டுகிறோம். கம்பெனியின் செல்வ நிலை வரவுரப் பெருகி வருவதைப் பாக்கும்போது, தென்னிந்தியாவின் தலைசிறந்த ஸ்தாபனங்களில் ஒன்றுக இன்னும் சில காலத்திற்குள் இந்தியன் மியூச்சுவல் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாதிக் கல்யாணம்

"வஸந்தன்"

[ஸ்ரீமான் சிவராமய்யர் 50 வயதுள்ள ஓர் பாங்கர். அவருக்கு அவ்வளவு வயதாகி, ஆறு குழந்தைகள் இருந்துங்கூட, இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டு ஏழாவது குழந்தை ஒன்றையும் வளர்க்க ஆசைப்பட்டார். அதுவும் அடுத்த வீட்டுப்பெண் கமலத்தைப் பார்க்கப் பார்க்க அந்த ஆசை இன்னும் வளர்ந்தது.

அன்று சாயங்காலம் சிவராமய்யர் 'ஹாய்யாக' ஸோபாவில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில் உள்ளே யிருந்து 'கம கம' வென்று முகப்பௌடர் வாசனை வர அதைத் தொடர்ந்து 16 வயதுள்ள அவர் புத்ரி லக்ஷ்மி கூடத்துக்கு வருவதை அவர் கடைக்கண்ணால் பார்த்தார்.]

லக்ஷ்மி :—அப்பா! எழுந்திருங்கோ தூக்கமாப்பா!

சிவராமய்யர் :—(கண்ணை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்து குறட்டை விட ஆரம்பிக்கிறார்).

ல :—எழுந்திருங்கோப்பா! ரொம்பத் தூங்கினால் உடம்புக்காகாது. எழுந்திருங்கோ!

(சிவராமய்யர் குறட்டை அதிகமாகிறது).

ல :—என்னப்பாது? அப்புறம் கோவிச்சுக்குவேன். அப்பறம் அழுதேன், படுத்தினேன்னு நீங்க வருத்தப்படப்படாது. சொல்லிப்பிட்டேன். நான் சொல்றது காதிலே விழறதோல்லியோ?

சிவராமய்யர் :—(குறட்டையை நிறுத்தி விட்டு)

ஏண்டி, அசடே! தூங்கிண்டிருக்கிறவனுக்கு என்னமாடி காதிலே விழும்? இவ்வளவு பெரிய பொண்ணுக்குப் புத்தியில்லே பாரு.

(மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு குறட்டை விடுகிறார்)

ல :—அப்பா! அப்பா! எழுந்திருக்க மாட்டேளே! நிஜந்தானே?

சி :—பொய்!

ல :—என்னப்பா பொய்!

சி :—நான் தூங்கறது பொய்னு சொன்னேன்!......லக்ஷ்மி! என்னத்துக்காக நீ அடிப்போடறேங்கறது எனக்குத் தெரியும். அதெல்லாம் நீ எங்கேயும் இன்னிக்குப் போகப்படாது. பைசாக் கூடக் கொடுக்கமாட்டேன்......சரி எனக்குத் தூக்கம் வரது. ஹிம்சைப் படுத்தாதே, போ.

ல :—அப்பா! இன்னிக்குமட்டும் போய்ட்டு வந்துடறேன். இனிமேல் சினிமாவுக்குப் போகலே.

சி:—தெரியுமே எனக்கு! போ! போ! வேறே வேலை இல்லே. ஏதோ தாயில்லாத குழந்தைகளாச்சேனு கொஞ்சம் செல்லம் காண்பிச்சா ரொம்பத் தலை கிழ விழறீளே. அந்தப் பசங்கள், படுத்தற பாடு சகிக்க முடியலே. அங்கே பாரு மாடிலே, அவா போடர சத்தத்தை. நீ என்னடான்னா, தினமும் சினிமா சினிமான்னு கிளம்பறே. ரொம்ப அழகாருக்கு, பேஷ். உருப்பட்டாப்பிலேதான் போ!

ல :—கோவிச்சுக்காதிங்கோ அப்பா! அடுத்தாத்துக் கமலம் இருக்காளோல்லியோ, அவ என்னை வரியான்னு கேட்டா!......

சி :—(உற்சாகமாக) யாரு? கமலமா கூப்பிட்டா? பேஷ்! அப்போ போயிட்டு வாயேன். நீ என்னைக் கேப்பானேன்?

ல :—ஆமாப்பா! அவாத்திலே எல்லாரும் இன்னிக்குப் போகப்போறாளாம். இதோ எனக்காக வாசல்லே காத்திண்டிருக்கா!

சி :—அட அசடே! பின்னே அவாளை காக்கவைச்சுண்டா இங்கே நின்னிண்டுருக்கே! அடே கணபதி! ஒரு நாலணா எடுத்து லக்ஷ்மிக்கிட்டக்குடு! எலே!

(கணக்கப்பிள்ளை கணபதி ஓடிவருகிறான்)

கணபதி :—என்ன கூப்பிட்டீளா?

சி:—அட முட்டாப்பயலே! நாலணா கொண்டுவந்து லக்ஷ்மிக் கிட்டக்

கொடுன்னு சொல்லி எத்தனை நாழி யாரது? ஓடு!

ல:—அப்பா! நாலணு போறுது. அவாளாம் 9 அணு வீட்டுக்குத்தான் போகப் போறு.

சி:—சரி! ஒழிஞ்சுபோ! ஏ, கணபதி! ஒரு ஆறணு கொண்டுவந்து லக்ஷ்மி கிட்டக் கொடு.

ல:—ஆறணு போறுது, ஒம்பதணு.

சி:—சரி! தொலே. நாழியாச்சு? எட்டணு கொண்டுவந்து கொடு!

(கணபதி எட்டணு கொண்டுவந்து லக்ஷ்மியிடம் கொடுக்கிறன்)

ல:—நான் போயிட்டுவரேன், அப்பா.

சி:—சரி! போ! அவாளை இத்தனை நாழி காக்க வைச்சுப்பிட்டயே. போடி, அசடு!

(லக்ஷ்மி போகிறுள்)

கணபதி! லக்ஷ்மி போயிட்டாளோல்லியோ, கதவைத் தாழ்ப்பாள் போட்டுப்பிட்டு கணக்குப் புஸ்தகத்தைக் கொண்டுவா!

(கணபதி கணக்கைக் கொண்டுவருகிறன்)

சி:—போன மாசம் ஆத்திலே எவ்வளவு செலவழிஞ்சுருக்கு பாரு.

ல:—எழுபது ரூபாய் ஆயிருக்கு.

சி:—உன் சம்பளத்தையும் சேர்த்துத் தானே.

க:—இல்லையில்லை!

சி:—உன் சம்பளத்தையும் சேர்த்து எழுபத்து மூணேகால் ரூபாய்! வீட்டுச் செலவு 70 ரூபாய் ஆயுடுத்துங்கறியே, பாவி! ஏழு குழந்தைகளுக்கும் எனக்கும் 70 ரூபாய் ஆனல் என்னமாடா இந்தப் பட்டணத்திலே காலந் தள்ளறது கணபதி! உஹூம். அடுத்த மாசம் 50 ரூபாய்க்குமேல் ஆகக் கூடாது. தெரிஞ்சுதா? உனக்கு இந்த மாசம் ஒரு ரூபாய் குறைச்சிருக்கேன். போ!

க:—எஜமான். அப்படிச் சொல்லப் படாது. ஏற்கனவே எனக்குச் சம்பளம் $3\frac{1}{4}$ ரூபாய். அதிலேயும் ஒரு ரூபாய் குறைச்சால் நான் என்ன பண்ண? ஏழைமேல் கொஞ்சம் கிருபை பண்ணனும்.

சி:—போடா கிராக்கு! இப்பதான் எங்கே பார்த்தாலும் 'சம்பள வெட்டு' பண்ணுருனே. உன் சம்பளத்திலே ஒரே ஒரு ரூபாய் குறைச்சால் ரொம்ப அமர்க்களம் பண்றியே.

க:—இல்லே, எஜமான்! நீங்கள் அப்படிச் சொல்லப்படாது. நீங்கள் லக்ஷலக்ஷமாகச் சம்பாதிச்சு வைச்சுருக்கீள். உங்களுக்கு ஒரு ரூபாய் பிரமாதமா என்ன? ஏழை சம்பளத்திலே...

சி:—சீ, போடா அதிகப்பிரசங்கி. உன்னை யாரு இதெல்லாம் கேட்டா? உனக்கு வேலே செய்ய இஷ்டமில்லாட்டா ஓடிப்போ, கழுதை!

க:—ரொம்ப கோவிச்சுக்கறீளே, எஜமான். நான் போயிடணும்னு போயிடறேன். ஆனல் உங்கள்கிட்ட ஒரு சமாசாரம் சொல்ல மறந்து போயிட்டேன். அதைச் சொல்லிப்பிட்டுப் போயிடறேன்.

சி:—என்ன, சுருக்கச் சொல்லு!

க:—சாமா சாஸ்திரிகள் இருக்காரோல்லியோ?

சி:—ஆமாண்டா அவருக்கென்ன?

க:—அவர் ஒங்களைப் பார்க்க சித்த நாழி முன்னடி வந்திருந்தார். நீங்க வெளியிலேருந்து ஆறு மணிக்கு வருவீள்னு சொன்னேன். இப்போ அவர் அநேகமாக வருவர்.

சி:—எதுக்காக என்னைப் பார்க்கனும் அவர்?

க:—சங்கரய்யர் பொண் கமலத்திற்கு வரனுக்காக அவர்தான் ஒரு மாசமா 'அலே அலே'னு அலேயருரே, உங்களுக்குத் தெரியாதா? இன்னிக்கு சாயந்திரம் உங்களை பார்க்கணும்னு தவியாய்த் தவிச்சார். இப்போ கொஞ்ச நாழிலே இங்கே வரதாகச் சொன்னர்.

சி:—யாரு? கமலத்தின் கல்யாணத்திற்கா? அடுத்தாத்துக் குட்டி கமலம் தானேடா? உஹூம்! இவ்வளவு சிக்கிரமாகவே மாப்பிள்ளை வேட்டைக்கு ஆரம்பிச்சுட்டாளா? பேஷ்! அது எனக்குத் தெரியாதே! ஏண்டா கணபதி! எப்போ சாஸ்திரிகள் வரேன்னர்?

க:—இப்ப வந்துவிடுவர்.

சி:—பேஷ்! கணபதி! நீ என்ன இருந்தாலும் கெட்டிக்காரன்தான்டா. இந்த கணக்குப்புஸ்தகத்தைக் கொண்டு போய் வை.

க:—நீங்கள்தான் சம்பளத்தைக் குறைச்சுப்பிட்டீளே!

சி:—சீ, கழுதை! யார்ரா உன் சம்பளத்தைக் குறைச்சா? இனிமேல் உனக்கு 5 ரூபாய் சம்பளம் போட்டிருக்கேன், தொலை!

க:—எஜமான், இதோ சாமாசாஸ்திரிகளும் சங்கரய்யரும் வாசலில் வந்திருக்காள்.

சி:—இன்னும் அவாளை உள்ளுக்குள்ளே கூப்பிடலை? ஓடு. அவாளை வரச் சொல்லேன்.

(கணபதி வெளியில் ஓடி அவர்களை அழைத்துக்கொண்டு வருகிறான்)

சங்கரய்யரும் சாமா சாஸ்திரிகளும் } நமஸ்காரம்!

சிவராமய்யர்:—நமஸ்காரம்! அடாடா! வாங்கோ, வாங்கோ, இப்படி நாற்காலிலே உட்கார்ந்துக்குங்கோ.

(சங்கரய்யரும் சாமா சாஸ்திரிகளும் உட்காருகிறார்கள்)

சி:—கணபதி! இரண்டு கப் காப்பி கொண்டா, சுருக்க.

சாமா:—வாண்டாம், வாண்டாம் இப்பதான் சாப்பிட்டுட்டு வரோம்.

சி:—பரவாயில்லை. கொண்டாடா கணபதி!

க:—பால் வாங்கித்தான் போடணும் போலேருக்கு. சமையற்காரன் வெளியிலே போயிருக்கான்.

சாமா:—பரவாயில்லேனு. அதைப்பத்தி என்ன? இன்னும் எவ்வளவோ தரம் வரப் போறோம், போகப் போறோம். காபிக்கு என்ன?

சாமா:—நாங்கள் உங்களண்டை தனியாகப் பேசறத்துக்காகத்தான் வந்

KARACHI CAFE

சென்னையிலே

முதல் தரமானது

"கராச்சி கபே"

இந்து பிராமண சிற்றுண்டி சாலை

15-5-39 ஆரம்பம்

● விசாலமான காற்றோட்டமுள்ள விசித்திரமான அறைகள் கூடங்கள், மினுக்கான அமைப்புகள் ருசியான பக்ஷணங்கள்.

● சம சீதோஷ்ணம் நிறுவிய கூடம்.

குடும்பங்கள் கூட்டத்தார்களுக்கு வசதியான தனி இடம்,

● வட, தென்னாட்டுப் பக்ஷணங்கள் அவ்வந்நாட்டுப் பிராமண மேதாவிகளால் தயாரிக்கப் படும். மிட்டாய் வகைகள் வெகு விசேஷம்.

அன்டர்சன் ஹால், எஸ்பிளனேட்.

(ஹைகோர்ட்டுக்கு எதிரில், டிராம், பஸ் மார்க்கத்தில்)

தோம். இவ்வளவுநாளாய் எப்ப உங்களைப் பார்க்கலாம்னு தவிச்சுண்டிருந்தோம். இன்னிக்கித்தான் அந்தப் பாக்கியம் கிடைச்சுது.

சிவராம் :—ஹே, ஹே! என்னிக்கும் வராதவா என்னைப்பார்க்க வந்தால் அது என்பாக்கியம்தானே, சாஸ்திரிகளே.

சாமா :—சங்கரய்யர்வாளை உங்களுக்குத் தெரியுமோல்லியோ?

சிவராம் .—பேஷாகத் தெரியும். பேசினது இல்லையே தவிற அடிக்கடி சந்திக்கிறது வழக்கம்.

சாமா :—அவா நம்ம ஜாதிதான், சோழதேசத்து வடமா.

சி :—ஓ ஹோ! ரொம்ப சந்தோஷம்.

சாமா :—சங்கரய்யர்வாள் பொண் கமலத்தை நீங்கள் பார்த்திருக்கிளா?

சி :—கமலமா? உம்!...பார்த்திருப்பதாகத்தான் ஞாபகம். ஆமாம்! சமாசாரத்தைச் சொல்லுங்கோ.

சாமா :—அவள் கல்யாணத்திற்காக வரன் தேடி ஒரு வருஷமாய் அலையறோம்.

சங்கரய்யர் :—அதை ஏன் கேட்கிறீர்கள் போங்கள். உங்களுக்கு அந்தக் கஷ்டம் தெரியாதது இல்லை.

சி :—சிவ சிவா, பெண்ணைப்பெற்று வரனுக்காக அலைகிற கஷ்டம் யாருக்குத்தான் தெரியாது? உம்!

சாமா :—அப்படி அலைந்தும் மனசுக்குப் பிடித்த பிள்ளை ஒன்று கூடக் கிடைக்கவில்லை...ஆனல் நீங்கள் மனசு வைத்தால் கல்யாணம் நடக்கும். ஹே, ஹே!

(அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறர்)

சங்கரய்யர் :—ஆமாம்! நீங்கள் இந்த சமயத்தில் தயவு பண்ணனும்னு கேட்பதற்காகத்தான் நாங்கள் வந்தோம். நீங்கள் எப்படியாவது இந்தக் கல்யாணத்தை முடித்து வச்சு என்னைக் காப்பாத்தனும்.

(சங்கரய்யர் நமஸ்காரம் பண்ணுகிறர்)

சிவராமய்யர் :—(பொங்கி வந்த குதூகலத்தை அடக்கிக்கொண்டு) அடாடா! எதற்காக என்னை நமஸ்காரம் பண்றீள்? எழுந்திருங்கோ!, சங்கரய்யர்வாள். நான் உங்க மனுஷன் தானே.

(சங்கரய்யரைப் பிடித்துத் தூக்கிவிடுகிறர்)

சாமா :—பெரியவா நீங்க கருணை பண்ணினல்தான் தான் குழந்தைக்கு இந்த வருஷம் கல்யாணம் நடக்கும்.

சிவராமய்யர் :—ஒண்ணுக்கும் நீங்க பயப்படாதேயுங்கோ. எப்போ நீங்க இவ்வளவு தூரம் என்னைக் கேட்டுண்டேளோ, அப்போ கல்யாணத்தை நடத்த வேண்டிய பொறுப்பு என்னுது......ஆமாம். எப்போ முகூர்த்தம் பார்த்திருக்கிள்?

சாமா :—வர ஆனி 10 தேதி.

சி :—ஏன் ஆனி? வர வைகாசிலே முகூர்த்தம் பார்த்து விடறது தானே?

சங்கரயயர் :—(கவலை நீங்கியவராய்) அதற்கென்ன? உங்கள் இஷ்டம்போல் வைகாசியில் வைத்துக்கொண்டால் போகிறது.

சி :—சரி! கல்யாணத்துக்கு எவ்வளவு செலவு எஸ்டிமேட் போட்றிக்கியள்?

சங்கரய்யர் :—ஆயிரம் ரூபாய் எல்லாத்துக்குமாகப் போட்டிருக்கேன். 500 ரூபாய் மாப்பிள்ளைக்குக் கொடுப்பதாக உத்தேசம்.

சி :—மாப்பிள்ளை வாங்கிக்கொண்டால் தானே ஐயா, கொடுப்பீர்கள்? ஹீ, ஹீ. (சிரிக்கிறர்)

(சங்கரய்யரும் சாமாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ளுகிறர்கள்)

சங்கரய்யர் :—மாப்பிள்ளை கேட்காமலிருந்தால் கொடுக்கவேண்டாம், கேட்கிறபோது கொடுத்துத்தானே ஆகணும்?

சி :—அது சரி! ஹீ, ஹீ!...உம்! ஆக மொத்தம் 1500 ரூபாய் கல்யாணத்துக்கு ஆகும். சரி! அதைப்பற்றி நீங்க கவலைப்படவேண்டாம். அந்தச்செலவை நான் பார்த்துக்கொள்கிறேன். சங்கரய்யர்வாள்! நீங்கள் ஒண்ணுக்கும் கவலைப்படவாண்டாம்.

சங்கரய்யர் :—(பூரிப்புடன்) ஏதோ பகவான் தான் உங்கள் மனதில் புகுந்து எனக்கு ஒத்தாசை செய்யப் பண்ணினர். அந்த 1500 ரூபாய்க்கு நோட்டு வேண்டுமானலும் எழுதிக் கொடுக்கிறேன்.

சி :—நோட்டும் வாண்டாம், கீட்டும் வாண்டாம். இவ்வளவு தூரம் நாம் அத்யந்த

BOOKS

By
K. S. VENKATARAMANI

JUST PUBLISHED

		Rs. As.
1. **A Day with Sambhu** (In Hindi)	...	0 3

	Rs. A.
2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ...	1 8
3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged)	2 0
4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition	1 0
5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English, Second Edition)	0 8
6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ...	1 0
7. **Murugan, theTiller** (A Novel of Indian Rural Life) Third Edition	2 0
8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition	1 0
9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ...	1 0
Booklets :	
1. **The Indian Village** (A Ten-Year Plan) ...	0 8
2. **Dr. Annie Beasant A Tribute** ...	0 4
High Ways of Astrology By Kumbha. Second Edition ...	1 8
Venkatramani: Writer and Thinker By Manjeri S. Isvatan ...	0 8
In Tamil :	
1. **Kandan, The Patriot** (By the Author himself) ...	1 0
2. **Murugan The Tiller** By Krishna Kumari (M. L. J. Office, Mylapore)	1 8
3. **The Indian Village** (By the Author himself) ...	0 2
In Telugu :	
1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ...	1 8
2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1 4
3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1 4
In Sanskrit :	
1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ...	0 4

SOME OPINIONS

1. Mr. Venkataramani writes beautifully about Indian village life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—HAMILTON FYFE in *The Daily Chronicle.*

2. Mr. Venkataramani is a Village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

3. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

4. One of the foremost writers of India; an Indian Thinker.—*Public Opinion.*

The following books have been approved for Library use by the Madras Text-Book Committee: Vide Fort St. George Gazette (Part IB) Supplement dated 2nd June 1936. (Consolidated list of approved books).

Approved for Library use :—

	Vide page of the Ft. St. George gazette		Rs. A.
English :			
Paper Boats	57	...	1 0
A Day with Sambhu	57	...	0 8
The Indian Village	53	...	0 4
Tamil :			
Our Village Life	155	...	0 2
Sanskrit :			
Approved for Class use :—			
Sambhu-Caryopadesa By Y. Mahalinga Sastri	215	...	0 4

SVETARANYA, ASHRAMA, 312, Thambu Chetty Street, Madras.

மாகிவிட்ட பிறகு அதெல்லாம் எதுக்காக? ஆமாம்! சீக்கிரம் நிச்சயம்பண்ணி கல்யாணப் பத்திரிகை அனுப்பணுமோல்லியோ?

சங்கரய்யர் :— நிச்சயம் பண்ணி இதோ கல்யாணப் பத்திரிகை எழுதி வைச்சிருக்கேனே!

சி :—என்னய்யா, மாப்பிள்ளையைக் கேட்காமே முதலிலேயே நீங்க நிச்சயம் பண்ணிப் பிட்டியளோ? ஆச்சர்யமாயிருக்கே... கொடுங்கோ பத்திரிகையை.

சங்கரய்யர் :— மாப்பிள்ளையைக் கேட்காமே எழுதுவமா?

(சிவராமய்யர் வாங்கி அதைப் படிக்கிறார்)

சி :—...யா? ஐயய! தப்புந் தவறுமா எழு... வைச்சுருக்கீளே. மாப்பிள்ளை பேரு ராமதாஸ்ன்னு போட்டிருக்கு?

(சங்கரய்யரும் சாமா சாஸ்திரிகளும் கலவரத்துடன் ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள்)

சங்கரய்யர் :— ஆமாம். மாப்பிள்ளைபேரு ராமதாஸ்தான். அதிலே தப்பு இல்லை.

சி :—(மெதுவாக) என்னது?... என்ன ஸ்வாமி! பொண்ணை.... எனக்கு....

(சிவராமய்யர் நாற்காலியில் சாய்கிறார்).

சா :—ஐயோ! சங்கரய்யரே! அவருக்கு மூர்ச்சை போட்டுபிட்டாப்போலே இருக்கே. ஐயோ என்ன பண்றது?

ச :—அடே கணபதி! வாடாப்பா சுறுக்க! அடே! தண்ணு கொண்டுவா சுறுக்க!

(ஏக அமர்க்களப்படுகிறது)

குறைவு, பசியின்மை, இரத்தக் குறைவு, கைகால் அசதி, உள்ளங்கை, கால்

எரிச்சல், இளமையில் தோன்றும் அகால நரைப்பு, வீக்கம்

கிட்டு : டாக்டர் ஸார்! ஓய்ச்சலாயிருக்கு. ஒரு வேலையுமே செய்ய முடியவில்லை. ஸார், என்ன ஸார் செய்வது?

டாக்டர் : காந்தூர் லேகியம் இதற்கு சரியான மருந்து ஒரு மண்டலம் அதை சாப்பிடு எல்லாம் குணமாய் விடும்.

கிட்டு : காந்தூர் லேகியம். எங்கே ஸார் கிடைக்கும்?

டாக்டர் : சென்னை நயினர்சன் அண்டு கம்பெனியில் கிடைக்கும்.

பலன் பெருவிடில் பணம் வாபீஸ் செய்ய உத்திரவாதம் பெற்றது.

12 தோலா (10 நாள்) லேகியம் ரூ. 1—0—0
24 ,, (20 ,,) ,, ரூ. 2—0—0

காந்தூர் லேகியம் டிப்போ, பம்பாய்—சென்னை—கல்கத்தா.

Sole Agents:— **For INDIA BURMA CEYLON & F. M. S.**

நயினர்சன் அண்டு கம்பெனி,

198, அங்கப்ப நாய்க்கன் தெரு :: ஜி. டி., சென்னை.

பித்தவெட்டை, சோகை, மஞ்சள் காமாலை, பாண்டு, கண் மாசி பூத்தல்

பிரசவத்துக்குப் பின் ஏற்படும் பலக்குறைவு, தாதுபலக்